58881

O—,892 m8L7,12
N33
58881

உ

கடவுள் துணை

ஸ்ரீ ஆரிய பால கான சபா,

ஸ்ரீ பால விநோத நாடக சபையார் முதலிய

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

# "பீஷ்மர் பிரம்மச்சரியம்"

அல்லது

# பீஷ்மர் பிரதிக்ஞை

---


உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை: ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் உபாத்தியாயருமான

சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்

நாடகாசிரியர்:

**ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்**

எழுதியது.


---


பிரசுரித்தவர்கள் :

**R. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

---

காபிரைட்] 1933 [விலை அணா 6.

0-,892m SL7, B.
N33
58881
2716
594 5112

# நாடகாம்லம்

'பீஷ்மர் பிரதிக்ஞை' என்னும் இக்கதை மகா பாரதத்திலுள்ளது. பாரதத்துக்கு ஆதிபீடக் கதையும், இதுவேயாகும். இதில், என் சிற்றறிவுக் கெட்டியபடி சில கற்பனாலங்காரங்களைக் கூட்டி நாடகரூபமாக எழுதியிருக்கிறேன்.

இதை நடத்தப் பிரியப்படும் ஆக்டர்களாவது, கம்பெனி ஏஜண்டுகளாவது இக்கதாசாரப்படி உடுபாவனைகளும், சீன்களும் தயார்செய்து நடத்துவார்களாகில், இந்நாடகந் தக்க பேர்பெற்று வளரும். வெகுவாயிதில் சில மாறுதல்காக்ஷி. அதாவது பீஷ்மருக்கு கிருஷ்ணன் வேலைக்காரனைப்போலும், துரோபதிக்கு கிருஷ்ணனைப்போலும், பாவனைகாட்டுஞ் சீனும், பீஷ்மருக்கு மகாவிஷ்ணு தரிசனக் காக்ஷியும், கிருஷ்ணனிடம் ஆகாயத்திலிருந்து சக்கரம் வரும் சூட்சியும், அர்ஜுனன் பாணப்ரயோகத்தால் ஜலம் தருவித்து பீஷ்மருக்குத் தர்ப்பாசனம் அமைத்துத் தருமாக்ஷியும் முக்கியமாய்க் காட்டவேண்டும். சீன்கள் காட்டாது இந்நாடகத்தை நடத்தினால் ரசிகமிராது. ஆகவே, முக்கியமாக இதைக் கவனிக்க வேண்டும்.

நிற்க, (பையாஸ்கோப்) சினிமா காக்ஷி சாலையில் இந்நாடகத்திலோர் பாகத்தை பீஷ்மர் சந்தனுகங்கைக்குப்பிறந்து மச்சகந்தியைச் சந்தனுவிற்குக் கலியாணம் செய்வித்துத் தான் பீஷ்மம் பெறும்வரை பீஷ்மர் பிரம்மச்சரியம் என்னும் பேருடன் பீஷ்மர் பிறப்பு வளர்ப்பு முதல் காண்பிக்கின்றனர். அதுவும், ஒருவித ஜோபிதமாகவே இருக்கிறது. எனினும் பாரதக் கதானுசாரமாக வரும் பீஷ்மர் பிரதிக்ஞை மூன்றையும் ஒன்று சேர்த்து, நானிக்கதையை பீஷ்மருடைய அந்தியம்வரை எழுதி நாடக ரசிகமாக சில கற்பனைகளைச் சேர்த்திருக்கிறேன். இந்நாடகம் வேறொருவரால் எழுதி நடத்துவதற்குமுன் நானே இதனை 30-1-19-ல் எழுதி முடித்து, என்னால் நடத்திவரும் ஆரிய பால கான சபா என்னும் பாய்ஸ் நாடகக் கம்பெனி பால்யர்களுக்கு இதை பாடங்கொடுத்து நடத்தினேன்.

எனது ஆசிரியர் ஸ்ரீமான் சரபக்கவியவர்களின் ஆசீர்வாதத்தாலும், இஷ்டதேவதையாய் விளங்கும் ஸ்ரீ முருகக்கடவுள் கிருபையாலும், சொற்பத் தமிழ்ஞானம் பெற்ற என்னாலெழுதிய இக்கதையில் பெரும்பிழை காணினும் பெரியோர் பொறுக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இரண்டாவதாக, என்னால் நடந்த சென்னை "ஸ்ரீ பால விநோத நாடக சபாவில்" இச்சரிதையை சகல ஜனமனசபா ரசிகமாகத் தக்க சீன் உடுபாவனைகளைச் சேகரித்து நடத்தியதைக் கண்ட நாடகாபிமானிகள் பலரும் இச்சரிதையை அச்சிட வேண்டுமென இச்சித்ததால் இது சமயம் வெளியிடலானேன். வெகுவாயிக்கதையை நானெழுதுவதற்குக் காரணமாக விளங்கியவர் தமிழ் நாடகச் சக்ர

வர்த்தி தமிழ் நாடகமேடைக்கோர் சங்கீதபானுவென விளங்கும் கனம் P. S. வேலுநாயரவர்கள் என்பதைக் குறிப்பிட வேண்டிய தவசியம்.

அன்றியும் இந்நூலின் சகல உரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே உரியதாதலின், மற்றவர்கள் இப்புஸ்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை.
23-2-33

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.
நாடகாசிரியன்.

---

## நாடக நடிகர்கள்:

| | |
|---|---|
| பரிமளகந்தி | கதாநாயகி தாஸராஜன்மகள் |
| சந்தனுமகாராஜன் | அஸ்தினாபுரத்தரசன் |
| பீஷ்மன் | ஷை இளவரசன் |
| தாஸராஜன் | (வலைஞன்) நெய்தநிலத்தரசன் |
| தாஸராணி | ஷை மனைவி |
| அம்பாள் | காசிராஜன் மகள் |
| பரசுராமன் | பிராமண வீரன் |
| துரியோதனன் | அஸ்தினாபுரிக் கிறைவன் |
| சகுனி | ஷை மாமன் |
| துற்சாசனன் | ஷை சகோதரன் |
| விகர்ணன் | ஷை சகோதரன் |
| கிருஷ்ணன் | துவாரகைக்கரசன் |
| அர்ஜுனன் | பாண்டு மைந்தன் |
| துரோபதி | ஷை மனைவி |
| சிகண்டி | யாகசேனன் மகள் |
| கர்னன் | அங்கதேசாதிபதி துரியோதனன் துணைவன் |
| சாளுவன் | சாளுவதேசத்தரசன் |

தூதுவர், வேடர்கள், போர்வீரர், மந்திரிகள், அம்பிகை, அம்பாலிகை, தருமன், பீமன், நகுல சகாதேவன் முதலியோர்.

நாடகம் நிகழிடம்:

அஸ்தினாபுரியிலும் அந்த பாகத்திலுமாம்.

Copy Right and Rights of Translation in any otherLanguages are reserved by the Publishers.

உ

முருகன் துணை.

# "பீஷ்மர் பிரம்மச்சரியம்"

அல்லது

# பீஷ்மர் பிரதிக்ஞை

## விநாயகர் துதி.

விருத்தம்

மந்திர முனிவர் சொன்ன மாபாரதத்தி லோங்குஞ்
சுந்திர பீஷ்மன் காதை தொல்புவியோர் கொண்டாடுஞ்
செந்தமிழ் விலாசமாகத் தெளிவுட னோதுதற்கு
சிந்தூர முகத்தோன் பாதஞ் சிரம்வகித் தேற்று வோமால்.

### சீன்-1. இடம்—யமுனா நதி.

நடிகர்:—பரிமளகந்தி.

[பரிமளகந்தி ஓடத்தின் மீதமர்ந்து]

(மதுடக்கல்யாணம் என்றமெட்டு)

பாட்டு

தந்தருள் காக்ஷி சந்த விலாக்ஷி
மாக்ஷி காமாக்ஷி மீனாக்ஷி (தந்)

சந்ததம் நானே உன் பதந் தானே
தஞ்ச மென்று நம்பி வந்தேனே (தந்)

தொகையறா

சந்திர ஜடாதரி தாசர்க் கிருபாகரி
தமிழ் மதுரை ராஜேஸ்வரி
தந்திர மகேஸ்வரி சங்கரலிங் கேஸ்வரி
தற்பரி எமை யாதரி

பாட்டு

சமய மிதுவே ணிதய மகிழ
வரம் தருளுஞ் சுமன ரமணி (தந்)

வ-ம்:—திவ்யமங்கள தேஜோன்மய சொரூபி! ஜெகத் காரணி! சிற்பரி! எல்லாம் நின்செயலன்றி வேறென்ன வாகும். தேவி என்னே என் விதியின் பலன். பெண்ணாய்ப் பிறந்த திதற்குத் தானா, அம்பிகா!

## விருத்தம்

கன்னிநான் பருவமாகாக் காலத்தி லெனை மணர்ந்த
பன்னரும் பராசர் தன்னால் பரிமள கந்தியானேன்
இன்னரும் வயதுக்கேற்ற இன்பநா யகனிலாது
என்னரும் மன துவாடு தென்செய்வே னிதற்குத் தானே

வ-ம்.—நெய்த நிலத்தரசன் தாசராஜன் புதல்வி, மச்சகந்தி என்னும், இயற்பெயருடைய நான், எனது இளமைப் பருவத்தில் இந் நதி வோடம் செலுத்துங்காலையில், ஆற்றைக் கடக்கவந்த பராச ரிஷியின் தவ மகிமையால் பரிமள கந்தி என்னும், செயற்கை பெயர் பெற்று பருவமடைந்து, மகரிஷியைப் புணர்ந்து பிறந்த புத்திரனுடன் ரிஷி தம்மாசிரமம் சென்றவர் என்னைப் பழயபடி கன்னிப் பருவமாக்கி விட்டதும் தவிர, எனது யுத்த வயதில், ஓர் அரசகுல க்ஷத்ரியனை மணர்ந்து அதிக க்ஷேமத்தி லிருப்பா யென்றும் தெரிவித்துச் சென்றார். அவரின் வார்த்தையைப்போல் எனது பருவகாலம் பெருகி நின்றது மணமுடிக்கும் மன்னவன் என்று வருவாரோ அல்லது குலத்தினருள் ஒருவரை வதுவைசெய்ய நேருமோ எல்லாம் அம்பிகையின் அருள் போல் நடக்கும்.

[மௌனமாக நின்று பெருமூச்சு விடுத்து]

### பாட்டு

(குருவஜாஞ என்றமெட்டு)

பருவகால விரகதாபம் பாவை என்னை வாட்டுதே
அருவமான் மலரின் பாணம் ஆவல்மிக மூட்டுதே (ப)

தேகமெல்லாம் மோகமீறி செந்தணலாய்க் காயுதே
வேகமான தென்றல்புலி வேளைஎன்மேல் பாயுதே (பரு)

பாரமான கொங்கை மார்பின்
பக்க மெல்லாம் விம்முதே
பூரணச் சந்த்ரோதயத்தால்
பூவை யாவி கம்முதே (பரு)

வ-ம்:—எந்தக் காரணத்தைக் கருதி என்தேக மின்றிவ்வித சோகமடைகின்றது. மன்மதன் என்ற மாயா சொரூபியின் வீரத் தன்மையாயிது ஆம். ஆம்! அவன் யாரைத்துயர் செய்யான். காலமறிந்து அம்பெய்து கலங்கச் செய்யும் கந்தவேளின் காதல் மீறிய இந்த இளமையான எனது பருவகால முழுதும் இப்படி விருதாவில் போகுமானல், நான்ஜென்மமெடுத்தும் பிரயோஜன மில்லை. இந்நதியின் குளிர்ந்த ஜலத்திலிருந்து புறப்படும் மெல்-



லிய தென்றலானது மலர் வனம் புகுந்து மணத்தை மணர்ந்து மகரந்தத்தைக் கொண்டு வந்து என்மேல் தூவுகின்றது. ஐயோ பருவமாகா முன்னம் அநுபவிக்க நேர்ந்த இஷ்ட காமியார்த்தமும். பருவமடைந்தபின் கிடைக்கும் பாக்யம் பெறாத நான் இவ்வுலகில் இருந்தென்ன, இறந்தென்ன. (மௌனம்)
ஆம் முனிவரின் வார்த்தை ஒருக்காலும் வீணுகாது. எவ்விதத்தும் நாம் இன்பசுகம் பெறலாம் என்பதற்குப் போதிய சகுனமின்று கிடைத்திருக்கின்றது. எல்லாம் இறைவனருள் போல் நடக்கட்டும்.

(போகிறாள்)

சீன்முடிவு

---

## சீன்—2. இடம்—யமுனைக்கரைக் காடு.

நடிகர்:—மந்திரி, வேடர்கள், சந்தனுமகாராஜன்.

[சந்தனு பரிவாரங்களுடன் வேட்டைக்கு வருகிறான்]

### சந்தனுமகாராஜன் பாட்டு

கல்யாணி-ரூபகம்.

பல்லவி

வேட்டையாடுவோம் வாரீர் துணைவீர்
வியங்கொள் வனந்தனிலே (வே)

அநுபல்லவி

வேட்டையாடுவோம் வாரீர் ஓடும்
விலங்கினங்களைப் பாரீர்
நாட்டமுடன் மனந் தேறீர் நீங்கள்
நாற்புறமும் சுற்றி வாரீர் (வே)

சரணம்

பன்றி கடம்பை காட்டெருமை அதோ
பார்க்குது பாரதன் பெருமை
நின்றுவிளைவிப்பேன் சிறுமை யாரும்
நீங்காமலேவாரும் அருமை (வே)

வ-ம்:—அடே வேடர்காள்! நாற்புறமும் சுற்றி மிருகங்கள் பதுங்கி இருக்கும் புதர்களைக் கலைத்து துஷ்டமிருகங்களை வெளிப்படுத்துங்கள். ஒவ்வொன்றையும் எனது பாணத்திற்கு இறையாகச்

செய்கின்றேன். வேடர்காள்! நீங்கள் யாவரும் அடுத்த கானகம் சென்று அங்குள்ள மிருகங்களைக் கலைத்து என்னெதிராகத் துறத்துங்கள்.

[வேடர்கள் உட்செல்ல, சந்தனு மந்திரி யிருவரும் வெளிவந்து]

**சங்.** வ-ம்:—மந்திரியா! இன்று நமக்கு நல்ல வேட்டை கிடைத்தது. ஆயினும், இன்றைய தினம்போல் நான் என்றும் வேட்டையாடின தில்லை.

**மங்.** வ-ம்:—வேட்டைமேலதிகப் பிரியமுள்ள தமக்கு இன்று அபாரமான வேட்டை கிடைத்தது விநோதமாகவே முடிந்தது.

**சங்.** வ-ம்:—அதிருக்கட்டும், மான் கூட்டங்களைத் துறத்திக் கொண்டு நாமிங்கு வந்ததுமுதல் ஒருவித பரிமளவாடை வீசுங் காரணம் தெரியவில்லை. கவனித்துப்பாரும்.

**மங்.** வ-ம்:—வாஸ்தவந்தான். நானும் அதை கவனித்துத்தான் வருகின்றேன். விஷயம் இன்னதென் றெனக்கு விளங்கவில்லை.

**சங்.** வ-ம்:—இவ்வனம் தபோவனமுமல்ல. புஷ்பத்தருக்களும் இங்கு கிடையாது. அன்றி, யாராவது விண்ணுலக வாசிகளும் இங்கு தங்கியிருக்க ஏதுவில்லை. காரணமின்றி இவ்வித பரிமளானந்தம் வீசுகின்றதே. (யோசித்து) ஆம்; அருகாமையில் காணும் நதிக் கரையோரமாகவே இம்மணம் வருகின்றது. இதன் விசேடத்தை அங்குசென் றறிவதே நலம்.

மந்திரியா! அடுத்த வெளிப்புறத்தில் டேராவடித்து நமது சேனை சைனியங்களையும் வேட்டையாட்களையும், தங்கி களைப்பாரும்படி செய்யும். நமது புரவிகளுக்கும் சிரமபரிகாரம் தீர்த்துவையும். இன்றிரவை இங்குதானே கழித்தேகலாம்; நான் எதிர்தோன்றும் நதிக்கரையோரம் சென்று இவ்வாசம் வீசுங் காரணத்தைக் கண்டுவருகின்றேன்.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

---

## சீன்—3. இடம்—யமுனை நதிக்கரை.

நடிகர்:—சந்தனு, பரிமளகந்தி.

[ஓடத்தருகில் பரிமளகந்தி நிற்கின்றாள்; சந்தனு வெளிவந்து]

**சங்.** வ-ம்:—ஆஹா! இந்த யமுனையின் அழகைக்காண என்ன மனோனந்தமா யிருக்கின்றது. விசாலமுள்ள இக்கங்கையின் பிரவாகமானது என்ன நேர்த்தியாயிருக்கிறது. வெண்மை பொருந்திய ஜலத்துளிகளை வாரி இறைத்து ஒன்றோடொன் றுருண்டு சுருண்டு புறண்டு மேலெழுந்து மோதும் அலைகளைக்காண என்ன அலங்காரமா யிருக்கின்றது. ஆம், இந்த யமுனாதேவி இவ்வித மகிமை வாய்ந்து மானிலத்தோர்க்கு மனோனந்தத்தைக் கொடுப்பவளா யிருந்தும் சாந்தம், பொறுமை, சத்தியம் முதலியவற்றை கைக்கொண்ட சற்குணவதியா யிருக்கின்றாள். இந்த யமுனையின் தேகவாசம்தான் இவ்விதம் வீசுகின்றதோ? அன்றி இக்கரை யருகில் ஏதேனும் தேவதருக்கள் இருக்கின்றதோ? (சுற்றிப் பார்த்து) ஒன்றையுங் காணோமே? பின் இவ்வித வாசம் வீசுங் காரணமென்ன?



### பாட்டு

(சரிசரி இது தினமே என்ற மெட்டு)

இதுவென்ன மகத்துவமே
இவ்வாசம் வீசும்விதமே (இது)

நதிக்கரையிதனருகே நாணுமலரினமே
நவிலவுமியலா பரிமளமே
நன்றான இத்தினமே
இவ்வாசம் வீசும் விதமே (இது)

கந்தர்வ கன்னியரோ இக்காட்டில்யாருளரோ
காரணமெதுவோ தெரிகிலேனே
கண்டாலுமிக நலமே
இவ்வாசம் வீசும் விதமே (இது)

வ-ம்:—இவ்வுலகத்தில் நாமனிதர்களா யுதித்தவர்களில் ஒருவரேனும் அனுபவிக்கக் கூடாத மகா மேன்மை பொருந்திய ராஜ போகத்தை அனுபவிக்கும் நானும் இதுவரைப் பார்த்தறியாத இப்பரிமளவாசம் எங்கிருந்து வருகின்றது.

[பரிமள காந்தியைப்பார்த்து]

என்னயிது. ஆரண்யப்பதுமையோ. அழகுக் கணிகலமோ, அரம்பையர் திலதமோ. அங்கஜன் மணிக்கிரீடமோ யாரிது. ஆம் அங்கனாமணி யென்பதுண்மை. இவ்வாசம் வீசுங் காரியத்திற்கு இவளே காரணமாகநின்றாள். இவள் யாரா யிருக்கலாம். நடையும் உடையும் பின்னல் ஜடையும் ஒரு விதமாகவே இருக்கின்றது. இவளின் தேகவாசம் இவ்வனத்தையே மயங்கச் செய்கின்றது. என்ன ஒயில், என்ன சாயல்.

## விருத்தம்

அற்புத மயில் போல் சாயல் அழகிய குயில்போல் வார்த்தை
நற்புகழ் கேற்ற கொங்கை நறுமல ரணியுங் கூந்தல்
விற்பனர் போற்றுமேனி வேல்விழி யமைந்த மங்கை
நிற்பதைக் காணக்காண நேர்ந்தது மோகந்தானே.

## பாட்டு

(பாலசூரியன் போலவந்த என்றமெட்டு)

கோடிசந்த்ரப்பிர காசமாய்நிற்கும்
கோமளப்பெண் யாரோ இவள் யாரோ
எந்த ஊரோ என்ன பேரோ ஒரு (கோ)

தேடக்கிடையா அன்னமோ-இவள்
தேகமெல்லாம் சொர்னமோ பே ரென்னமோ (கோ)

காமராஜன் பீடமோ மோகக்
கலவிசெய்யுங் கூடமோ வி சேடமே (கோ)

தங்கமிழைத்த சங்கமோ—சங்கர
லிங்கன் எழுதும் சந்தமோ
மின்னுங் காந்தமோ (கோ)

வ-ம்:—கோடி சந்திர ப்ரகாசம்போலும், மன்மதன் மகள் போலும், மாயா ஜெகன்மோகனு வதாரம் போலும், அவ்வோடத் தருகிலி ருக்கும், அந்த மிகுந்த சுந்தரியா ளாரென்றறியக் கூடவில்லை. எதற்காக இவள் இங்கு நிற்கின்றாள். ஆஹா காணக்காண காம வின்பம் பொங்குகின்றதே, கண்ணுனந்த மாகின்றதே (யோ சித்து) இவளை இன்னுளென்று தெரிந்துக் கொள்ளாமல் வெறு மனே நாம் பேசிப் பலனென்ன. அருகில் சென்று, இவளை யாரென்று வினவி நமது மனக் கருத்தை வெளியிட்டு, மாலை சூடி மகிழ் வெய்துவதே சிலாக்கியம்.

[பரிமள கந்தியருகில் சென்று]

## தர்க்கம்

### கண்ணிகள்

(செந்தாமரை வந்தாளுரைஎன்றமெட்டு)

சந். எங்கிருப்பதுந்த நகரிங்கு வந்ததேது
எந்தன் முன்னெடுத்துரை செய்வாயே
நீ இப்போது. (எங்)



வ-ம்:—நீ யார் இந்த நதிக் கரையோரம் தனிமையாக தங்கி இருக்க வேண்டிய காரணம் என்ன தயவு செய்து தெரிவிக்கக் கூடுமோ.

பரி. வ-ம்:—(தனியாக) என்னயிது நமது குலாசார தொழிலை நடத்த நாம் ஓடத்தருகில் நின்றுகொண்டிருக்கும் சமயம்: எதிர்பாராத விதமாக எதிரில் தோன்றிய இவரைப் பார்த்தால் அரசரைப் போல் தோன்றுகிறது. அழகிலும் மன்மதனுக்குச் சமானமாக இருக்கின்றார், இவர் வந்த வேலையைவிட்டு நம் வளப்பங்களைக் கேட்கின்றார், இவரது முகக்குறிப்பைப் பார்த்தால் இவர் நம் மீது காதல் கொண்டவராகத் தெரிகிறது.

(யோசனை) நல்லது, பராஸ ரிஷியின் வார்த்தை முடியுங் காலம் இன்று நேர்ந்தாப்போல் தெரிகிறது. ஆகவே இன்றிவர் நம்முன் தோன்றினர். எதற்கும் நாம் சற்று லகுபிகுவாகவே வார்த்தை யாடுவோம். (எட்டி நின்று)

ஐயா! நான் யாரா யிருந்தால் தங்களுக் கென்ன. தாங்கள் வந்த வேலையை விட்டு இந்த விஷயத்தைக் கேட்பது நல்லதல்ல.

சந். வ-ம்:—அப்படியல்ல, மகா கொடிய துஷ்ட மிருகங்கள் வசிக்கக் கூடிய இவ்வனத்தின் நதிக்கரையில் வேறொரு துணையின்றி, ஓர் பேரிளம்பெண், தனித்திருப்பதைக்கண்ட எந்த ஆடவன் தான் சும்மா போய்விடுவான். ஐயோ பெண்ணென்றால் பேயு மிரங்கு மென்பது உலக மொழியல்லவா. ஆகவே உன்னைக் கண்டதும், விட்டுச் செல்ல மனமில்லாமல் கேட்கலானேன். அத்துமீறி கேட்டேனென்ற கோபம் கொள்ளக்கூடாது.

பரி. வ-ம்:—அந்தமட்டும் நீர் வெகு தந்திரசாலிதான், உம்மீது கோபம் வரக்கூடிய குற்றம் ஒன்றும் நீர் செய்யவில்லை.

சந்த. வ-ம்:—அப்படியா! வெகு சந்தோஷம். ஆனால் நீ,

(பாட்டு ஷை மெட்டு)

எங்கிருப்ப துந்த நக ரிங்குவந்த தேது
எந்தனுக் கெடுத்துரைசெய் வாயேநீ யிப்போது

வ-ம்:—என்மே லதிக தயவுசெய்து என் கேள்விக்குரிய பதில் கொடுக்கவேண்டும்.

(பாட்டு ஷை மெட்டு)

பரி. உத்தமரே இந்நதியில் வோட மிடுவேனே
ஒதுவேன் சிற்றூரின்வாசம் உண்மை யிதுதானே

வ-ம்:—நான் இந்நதியில் வோடம் விடுபவள் அடுத்த சிற்றூரில் வசிப்பவள்.

சந். வ-ம்:—ஐயோ பாவம்! உன்னழகுக்கேற்ற தொழில் உனக்கமைய வில்லை போலும். போகட்டும் அடுத்த சிற்றூரில் வசிப்பவளானால்-

(ஷை மெட்டு)

பெற்றெடுத்த வுன்னருமை, தந்தை பெயர் யாதோ
உற்றதை சொல்வாயெனக்கே உன் பெயருமேதோ

வ-ம்:—வடிவமமைந்த! உன்னைப்பெற்றெடுத்தத் தந்தையின் பெயரென்ன? உன் பெயர் என்ன? உள்ளதைச் சொல்லலாமல்லவா?

பாட்டு

(ஷை மெட்டு)

பரி. தாஸராஜனுமென் தந்தை தானே தெரிவீரே
பேசும்பரிமள கந்தி என்பேரறி வீரே

வ-ம்:—எனது பிதாவின் பெயர் தாஸராஜன். என் பெயர் பரிமள கந்தி

சந் வ-ம்:—என்ன! என்ன!! உன்பெயரென்ன பரிமள கந்தியா.
பரிம. வ-ம்:—ஆம்!
சந்த. வ-ம்:—இப்பெயருனக்கு இயற்கைப் பெயரா அல்லது செயற்கைப் பெயரா?

பரிம. வ-ம்:—இயற்கை பெயர் மச்சகந்தி. செயற்கைப் பெயர் பரிமள கந்தி.

சந். வ-ம்:—தகும் தகும்! இப்பெயருக்கேற்ற பரிமளமும் அமைந்திருக்கிறது. அதற்கேற்ற அழகும் அமைந்திருக்கிறது ஆனால், இன்னொன்றமையவேண்டும். அதற்கேந்த பாக்யசாலி அமைந்திருக்கின்றானோ தெரியவில்லை. அதிக்கட்டும் இன்னொரு சந்தேகம். அதை கேட்கலாமல்லவா?

பரிம. வ-ம்:—சந்தேகமில்லாமல் சந்தேகத்தைக்கேட்டு சந்தேகந் தீர்த்துக் கொள்ளலாம்.

சந்தனு பாட்டு

(தோடவேண்டாம் ஜூரநீபோ என்ற மெட்டு)

திரு-மணமுனக் கானதுவே சொல்
மயிலே குயிலே (மண)

மணமிகுமுனதொரு மன்னவன்பேரே
மனமகிழுடன்புகல்வா எந்தன்நேரே



தினகரமுகவதி யுனதொருசீரே
தெரிவதற்கெண்ணிமுன மணுகினேன்பாரே (மண)

வ-ம்:—உனது பருவகாலத்திற்கேற்ற திருமண வைபவம் நடந்து விட்டதா? எந்த பாக்யசாலி உன்னை விவாகம் செய்தார். சந்தோஷமாக பதிலளிக்க வேண்டும்.

[பரிமளகந்தி நாணத்துடன் நிற்கின்றாள்]

ஏன் அதை என்னிடம் சொல்ல லஜ்ஜையா யிருக்கின்றதோ? இதிலென்ன வெட்கம். உம், தைரியமாகச் சொல்; நாணப்படாதே.

பரி. வ-ம்:—நீரென்ன மகா விகட வார்த்தைகளாடுகின்றீர். போமையா போம்; வந்தவேலையைப் பார்த்துக்கொண்டு.

சந் வ-ம்:—வந்தவேலை இன்னும் முடியவில்லை. முடிந்தால் சென்று விடுகிறேன். நான் கேட்டதற்குப் பதிலைக்காணோமே.

பரி. வ-ம்:—இதென்ன சங்கடமா யிருக்கின்றது. ஏனையா அதைக் கேட்கின்றீர்.

சந். வ-ம்:—பாவம் பகவத் கிருபையால் நல்ல பேரழகு வாய்ந்த உனது வாலிபகாலம் வீணாய்க் கழிகின்றதா? அல்லது விநோதமாகவே செல்கின்றதா? என்பதைத் தெரிந்துகொள்ளவே கேட்கிறேன்.

பரி. வ-ம்—மகா தந்திரசாலிதான். என்ன சாமர்த்தியமாக வார்த்தையாடுகின்றீர். [நாணி நிற்க]

சந். வ-ம்:—பார்த்தனையா? மறுபடியும் தலை குனிந்துவிட்டாயே. என்னைப் பார்த்து சொல்லக்கூடாதா.

தர்க்கம்

(ஏனோ என்னை எழுப்ப என்ற மெட்டு)

பரி. சொல்லவெட்கமாகுமெனக் கின்னுமணமில்லை
சொந்தமான தந்தைதாயார் எண்ணிடவுமில்லை

வ-ம்:—எனக்கின்னுங் கலியாணமாகவில்லை. அதைக் குறித்து என் தாய் தந்தையரும் யோசிக்கவில்லை.

சந். வ-ம்:—அப்படியானால், அது ஒருவிதத்தில் எனக்கு சந்தோஷந் தான்.

(பாட்டு ஷை மெட்டு)

சந். மாதரசே உனக்குகந்த வாலிபக்கல்யாணம்
மாலைகூட மனமில்லையோ வழுத்துவாய்நிதானம்

வ-ம்:—ஆனல், உனக்குக் கல்யாணம் செய்துகொள்ளும் பிரியமுண்டா இல்லையா? இவ்விதங் கேட்டேனென்ற கோபமில்லாமல் பதில் சொல்லவேண்டும்.

பரி. வ-ம்:—ஏனையா! ஓர் வாலிபப் பெண்ணிடம் தாமிப்படி வார்த்தையாடுவது தகுமா.

சந். வ-ம்:—என்ன சொன்னேன். உலக வழக்கத்தைத்தானே கேட்டேன்.

பரி. வ-ம்:—அந்தமட்டும் நீர் மகா சாமர்த்தியசாலிதான். வீண் வார்த்தை வளர்க்காமல் சென்றுவிடுமையா.

சந். வ-ம்:—அப்படி தெரிவிக்காதே. உன் எண்ணத்தை என்னிடம் வெளியிட்டால், உனக்கேதாவது நன்மை யுண்டாகுமென்று நினைக்கிறேன்.

பரி. வ-ம்:—உம்மால் ஏற்படக்கூடிய நன்மை எனக்கு வேண்டாம். போய்விடுமையா.

சந். வ-ம்:—பெண்ணே! கெஞ்சிக் கேட்கும் ஓர் ஆடவனிடம் இப்படிக் கடுமையாகப் பேசலாமா? தயவுசெய்து நான் கேட்டதற்கு பதில் சொல்லவேண்டும்.

பரி. வ-ம்:—ஐயையோ இதென்ன பெருந் தொந்திரவாகிவிட்டது. சொல்லித் தொலைக்கிறேன் தொலைந்து போமையா?

(பாட்டு ஷை மெட்டு)

பரி. கல்யாணம் செய்திடுங் கருத்தெனக்குமுண்டு.
காலநிலையைக் கருதி காத்திருந்தேன்பெண்டு

வ-ம்:—உலக வழக்கப்படி எனக்குக் கல்யாணம் செய்துகொள்ளப் பிரியந்தான். ஆனாலும், தெய்வ சங்கற்பம் இன்னும் அக்காரிய சித்திக்கு இடந்தாவில்லை. எந்த மன்னவர் எனக்கு சொந்தமான சுகானந்தம்பெற வருவாரோ யாரறிவார்.

சந். வ-ம்:—நல்லது; எல்லாம் தெய்வச் செயல்போல் நடக்கும். இது வாஸ்தவந்தான். அவனன்றி யோரணுவும் அசையாதல்லவா.

(பாட்டு ஷை மெட்டு)

சந். சொல்லுமெந்தன் வார்த்தைதான் சுகந்தருமேமாது
தோதகமென்றெண்ணிடாது பேசக்கேளிப்போது

வ-ம்:—மாதே! இப்போது நான் உனக்கோர் வார்த்தை சொல்கிறேன். அதைக் கவனித்து அதன்படி செய்வாயாகில் அநேக நன்மைக்காளாவாய். உன்னிஷ்ட மெப்படி.



பரி. வ-ம்:—ஐயா நான் அப்போதே தெரிவித்தேனல்லவா அதிருக்கட்டும். இவ்வளவு தூரம் என்னிடம் விதண்டாவாதஞ் செய்ய வந்த தாம்யார் தமது ஊரொதுசிறிது சொல்லக்கூடாதா.

சந். வ-ம்:—ஆஹா தடையில்லாமல் தெரிவிக்கின்றேன். முதலாவது என்னூர் பெயரை உன்னிடம் தெரிவித்தால்தான் மற்ற காரியங்களுக்கும் அனுகூலமேற்படும்.

பரி. வ-ம்:—தங்களால் அனுகூலமேற்பட்டு ஆவதொன்றுமில்லை வார்த்தையைவளர்க்காமல் பேரூரைத்தெரிவியும்.

சந்தனு விருத்தம்

செந்திருமங்கை நாணுந் திருமுகவதியே கேளாய்
அந்தரத் தேவர்போற்றும் அஸ்தினபுரத்து மன்னன்
சுந்திர வுலகமெங்குந் தோன்றிடு மிருளை நீக்கும்
சந்திர குலத்துத் தோன்றல் சந்தனுராஜன்நானே.

பரி. வ-ம்:—சரி சரி. அஸ்தினபுரத்தரசரா அதனல்தான் இவ்வளவு தைரியமாகப் பேசுகின்றீர். நல்லது இனி உம்மிஷ்டத்தைத் தெரிவிக்கலாம்.

சந். வ-ம்:—இதோ காத்துக்கொண்டிருக்கின்றேன் கண்ணே, வேட்டை மார்க்கமாக வந்தநான் உனது தேகமணம்வீசும் வாசத்தைக்கண்டு மயங்கி இங்குற்று உன்னை நேரில் பார்த்து மதிமயங்கினேன். ஆதலால்.

பாட்டு

(கூடிக்குலாவிட என்ற மெட்டு)

கோடிநமஸ்காரம் கூடி யணைந்திடவே
கோக்கோகம் செய்திடவே(கோ)

மோடியேனுசரி ஜோடிஎனதுடன்
முத்தங்கொஞ்சிச்சரஸம் மெச்சும்மஞ்சத்தினிடம்(கோ)

(தொகையரு)

ஆசைக் கோரளவே இல்லை
ஆதலா லச்சம் வேண்டாம்
நேசத்தைமற வேன்காம
லீலையே எவர்க்கும் நன்றாம்.

பாட்டு

ஆனந்தக்கல்யாண சோபனமாமுகூர்த்தம்
இருவருக்கும் பொருத்தம்

ஏனிந்தத்தாமதம் தானன்புக்கேநிதம்
எங்குந்தங்குஞ் சங்கா
லிங்கங்கொஞ்சும் சுந்தரி (கோ)

வ-ம்:—காதலி மறுத்துரைக் காதே என்னுயிர் உன்கையி லிருக்கிறது நீ என்ன வேலை சொன்னாலும் செய்யத் தடையில்லை மங்கையற் கரசே தயவு செய்.

பரி. வ-ம்:—ஐயா! வெகு நன்று யிருக்கிறது உமது ஞாயம் வரன் முறை மாறிப் பேசவந்தீரே நீரோ க்ஷத்திரிய குலதிலகர்

## பாட்டு

(எந்தவகையிலும்கோண்டு என்ற மெட்டு)

ஜாதி முறைமையின் நீதி தவறியே
தாமிது சொல்லலாமோ நல்ல
க்ஷத்திரியர்க்குலத் துத்தமர்க்கிது
சம்மத வழியாமோ உலகதர்மமு மிதுவாமோ (ஜா)

நீதிமனுநெறி மார்க்கமுமிதுவோ
நிகழ்த்துவதழ காமோ-புவி
நிந்தனைபேசும் எந்தனைநீரும்
நினைவது சரியாமோ செங்கோல் ஞாயமுமிதுவாமோ (ஜா)

வ-ம்:—நானோ பரவ வம்ஸத்தைச் சார்ந்தவள் தாமோ க்ஷத்திரிய குல திலகர் அதிலும் அஸ்தினபுரிக் கரசர் சந்திர குலத் தோன்றல் தமக் கிம்மதி தகுமா, தாமென்னை இச்சிக்கலாமா தயவுசெய்து சென்றுவிடுமையா.

சங். வ-ம்:—பெண்ணமுதே! ஆபத்துக்குப் பாபமில்லை, குலங் கோத்திரமில்லை, இருந்தாலும் நான் செய்யத் தகாத காரியத்துக் கிணங்கி உன்னை வேண்டிக்கொள்ள, தடுப்பது நலமாகுமா கண்ணே! கலக்கங் கொள்ளாதே.

## தரக்கப்

(பயமடையாதே என்றமெட்டு)

சங். மதி முகமாதே மறுத் துரைக்காதே
மருவத் தருணமிது வா வா வா

பரி. மனமறியாது துணிவுடனீயே
மதவெறி யுடனென்னைத்
தழுவிட நினைவது வீண் வீண் வீண்

சங். நான் மறுமுகம் பாரேனே



பரி. நீ மயங்கிடிற் சேரேனே.

சங். மகா ஜெக ஜாலி

பரி. தகா திந்த கேலி

சங். மலரணையில் இருவருமே மருவிடலாம் வா வா வா. (மதி)

வ-ம்:—காதற்கிளியே! கரும்புவில்லைப் பிடித்த மாரன் விடும் பாண வேகத்தைத் தீர்க்கொணாதா! பிராண காந்தே! என்னுயிர் உடல் பொருள் ஆகிய இவற்றில் எதைக் கேட்டாலும் தடையின்றித் தருகின்றேன் தயவு செய்.

பரி. வ-ம்:—ஐயா! வீணாக என்னிடம் கெஞ்சிப் பேசுவதில் பலனில்லை. தெரிவிப்பதைக் கேளும்.

## விருத்தம்

உனக்குள்ள ஆசையைப்போல் எனக்குமுண்டு
உற்றதொரு வார்த்தையுண் டோதக்கேளும்
மனப்படிநா மிருவருமே மணந்துவாழு
மன்னாளில் நான்கற்ப வதியேயாகில்
எனக்குதிக்கும் பிள்ளைக்கர சேவெனன்று
என்னினத் தோர்முன்சத்தியம் செய்துதந்தால்
சினத்தமதன் விடும்வாளி வருத்தம்தீரச்
செய்குவேன் மொழிதவறில் சொல்லுவீரே.

வ-ம்:—உம்மை விவாகம் செய்துக்கொள்ள எனக்குப் பிரியந்தான். ஆனால் தாம் க்ஷத்திரியாக இருக்கின்றீர். நான் தாழ்ந்தவளாயிருக்கின்றேன். ஆதலால் உம்மை விவாகம் செய்துகொண்ட பின், தெய்வ சங்கர்ப்பத்தால் நான் கற்பவதியாகி ஆண் குழந்தை பிறக்குமாகில், அக் குழந்தைக்குப் பட்டந் தரிப்பதாக எனது குலத்தோர் முன்னிலையில் பிரமாணம் செய்து தந்தால், உமது இஷ்டத்திற்கு இணங்குவேன்.

சங். வ-ம்:—இதென்ன, இவ்விதம் பேசுகின்றாய், எனக்குப் புத்திரன் காங்கேய னிருக்கின்றான். க்ஷத்திரிய தர்மப்படி முதற் புத்திரனுக்குத்தானே பட்டந் தரவேண்டும். ஆகவே உனக்குப் பிள்ளைபிறந்தால் வேண்டிய கிராமங்களைக் கொடுத்து சிற்றரசனாக்கி விடுகின்றேன்.

பரி. வ-ம்:—வேண்டாம், அஸ்தினபுரி யாசாக்ஷிப் பட்டத்தைத் தருவதானால் சம்மதிப்பேன், அல்லது உம்மிஷ்டம்.

சங். வ-ம்:—காதலி! பட்டத்துக்குரியவன் கங்காபுத்திரன், * காங்கேயனிருக்கின்றானே!

* காங்கேயன் என்பது பீஷ்மரின் முதற்பெயர்.

பரி. வ-ம்:—இருந்தால் அவனுக்குப் பட்டந்தரித்து அரசாக்ஷி செய்யும் நான் வருகின்றேன்.

[சந்தனுவை பார்த்துப் போகின்றாள்
சந்தனு மயங்கி நிற்கிறான்]

(சீன் முடிவு)

---

## சீன்—4. இடம்—அஸ்தினாபுரத்துராஜ வீதி.

நடிகர்:—பீஷ்மன் மந்திரி

பீஷ். வ-ம்:—மந்திரியாரே! என்ன காரணம் எதற்காக எனதுபிதா இரண்டொரு நாளாய் மன வருத்தத்துட னிருக்கின்றார். கானக வேட்டைக்குச் சென்றுவந்த நாள் முதல் கவலையாகவே இருக்கின்றாரே. அங்கேதாவது விசேஷமுண்டா.

மந்தி. வ-ம்.—விசேஷமொன்றுமில்லை. அவருடைய மனவருத்தத்தை உம்மிடம் தெரிவித்தால் அதனால் உமக்கேதாவது வருத்தம் நேரிடக் கூடுமோ வென்று அஞ்சுகின்றேன்.

பீஷ். வ-ம்:—அப்படி! எனக்கொன்றும் வருத்தம் வாராது. எனக்கு வருத்தம் வரக் கூடிய விஷயமாகவும் இராது. ஆதலின்,

தர்க்கம்

(மாலையொன்று கையில் என்ற மெட்டு)

எந்தன் தந்தை மனம் நொந்து வருந்திட
வந்த வகையென்ன மந்திரியே
இந்த விதமென்றதை எந்தனுக்கு
இயம்பிடு வாய் குண தந்திரியே

மந். கானக வேட்டைக்குப் போன விடத்திலோர்
கன்னியால் வந்த கலக்க மிது
தானவள் வந்து அணைந்து சுகித்தால்
தணியும் விரகச் சபல மது

பீஷ். எங்கிருப்பதவள் எந்த ராஜன் மகள்
என்ன பெயரந்த கன்னிகைக்கு
சங்கையில்லாமலே நானதைத் தெரிய
சற்றெடுத்துச் சொல்லு வா யெனக்கு

மந். அத்தினா புரிக்கடுத்த நெய்தனிலத்
தாசன் பரவன் புத்திரி யாம்



மெத்த சௌந்தர முற்ற மங்கை பெயர்
மெச்சும்பரிமள கன்னிகையாம்

மந். வ-ம்:—இளவரசே! ஒருநாள் நமது மகாராஜா கானகவேட்டைக்குச் சென்றவிடத்தில் நதிக்கரையிலிருந்த பரிமளகந்தி என்னும் பரவ புத்திரியின்மீது ஆசைகொண்டு அணைய அழைக்க அவள் மறுத்து தனக்குப் பிறக்கும் பிள்ளைக்கு பட்டம் தருவதானால் தமதிஷ்டத்திற்கு உடன்படுவேனென்று சொல்ல, அதற்குப் பதில் சொல்லத் தெரியாதவராய் விசனத்துடன் வீடுவந்து மன்மதாவஸ்தையில் மதிமயங்கி இருக்கின்றார். இதுவே விஷயம் இனி தமது இஷ்டம்; அவரதிஷ்டம்.

பீஷ். வ-ம்:—என்னயிது! கேவலம் ஓர் பரவஜாதிப் பெண்மீது காதல்கொண்டு இவ்விதம் கலக்கமுற்றார் என்றால் வேறென்ன இருக்கிறது. வாஸ்தவம், யாரைக் காமன் துயர் செய்யான். புண்களாகிப் புரந்தரன் மெய்யலாம், கண்களானது காமத்தினாலல்லவா? தந்தையை நொந்து பிரயோஜனமென்ன.

பாவம்; எனக்குப் பயந்து அவள் புத்திரனுக்கு பட்டங்கொடுக்க மனமில்லாமல் வந்துவிட்டார்போல் தெரிகிறது. பிள்ளையால் பிதா இன்பம் பெறவேண்டி யிருக்க, துன்பத்திற் காளாகச் செய்வேனோ? நான் இக்கட்சணமே சென்று அம்மங்கைக்கு எனது மகுடத்தைக் கொடுத்து தந்தையை மணம்புரியச் செய்கிறேன். இதுவே சத்தியம். இனி என்னுயுள் உள்ளவரை இந்த ராஜ்யத்தைக் கருதாமலும் விவாகம் செய்து கொள்ளாமலும், பிர்மச்சாரியாகவே இருந்து காலங்கழிக்கின்றேன். வாரும் தந்தையிடம் போகலாம்.

[இருவரும் போகின்றனர்]

(சீன் முடிவு)

---

## சீன்—5. இடம்—சந்தனு பள்ளியறை.

நடிகர்:—சந்தனு, தோழிகள், மந்திரி, பீஷ்மர்.

[சந்தனு படுக்கையிலிருக்க தோழிகள் விசிறிக்கொண்டு நிற்கின்றனர். சந்தனு எழுந்து தன்னை மறந்து]

சந். வ-ம்:—ஆஹா! ஏன் இந்த ஜென்மமெடுத்தேன். கருத்துக்கிசைந்தக் காதலியைக் கண்டதும் கலந்தணையாத ஜென்மம் என்ன ஜென்மம். என்ன அழகு! என்ன சுந்தரம்! நினைக்கவுங் கூடுதில்லையே. (திரும்பி தோழியைப்பார்த்து) யாரது? ஆஹா!

ஆசைகொண்ட நேசவிலாசி! கிருபா சமுத்திர சரஸ விரக ஜனனந்த மனோசுந்தரி இதோ நிற்கின்றாள். ஆ காதலி!

[ஓர் தோழியைப் பார்த்து]

## பாட்டு

(துமபினமோரி என்ற மெட்டு)

பஞ்சணையழகாய் விரித்திருக்கின்றதே
பருவமிதே மருவவாராய் (பஞ்)

வ-ம்:—காதலி! வா; ஏனங்கு தனித்து நிற்கின்றாய்? இதோ உனது வரவைநாடி நானடைந்திருக்கும் வருத்தத்தைப் பார். கண்ணே! முன்பே தெரிவித்திருந்தால் உனது மெல்லிய பாதம்நோக நடந்து வரவிடுவேனோ நான் காதற்கிளியே.

[மற்றொரு தோழியைப் பார்த்து]

(பாட்டு ஷை மெட்டு)

மிஞ்சிபேமாரன் வஞ்சியேயெந்தன்
மேலெய்கிறான் பாணம்
அஞ்சுகமேபெண் ரஞ்சிதமே-என்
அன்னமேநன் மயிலே குயிலே (பஞ்)

வ-ம்:—கண்ணே! ஏனங்கு தனித்து நிற்கின்றாய். உன் வரவைத் தடுப்பவர்கள் யாருமில்லை. அச்சத்தைவிட்டு அருகே வா. எச் சராசரமும் மெச்சத்தக்க உன் மன்னவ நானிருக்க, உனக் கென்ன பயம். அருகில் வா; என் னாவலைத்தீர்.

[முதல் தோழியைப் பார்த்து]

(பாட்டு ஷை மெட்டு)

இங்கிதலீலைக் கங்கஜனநானே
ஏந்திழையே மானே
சங்கையில்லாமல் தழுவிடவருவாய்
சரசியே செந்தேனே (பஞ்)

வ-ம்:—வனிதா! இதென்னமோடி. ஏனிந்த சாகஸம். கண்ணே! கண்ணெடுத்துப் பார். என்னிடம் தேடிவந்தும் ஏனிந்த சாகஸம் செய்கின்றாய். [சந்தனு மறுபடியும் மஞ்சத்தில் சயனித்துக்கொள்ள, பீஷ்மரும் மந்திரியும் வர தோழிகள் விலகவும் பீஷ்மர் பிதாவை நமஸ்கரித்து அருகிலமர்ந்து]

பீஷ். வ-ம்:—ஐயா என்னருமைப் பிதாவே! சகலமும் தெரிந்த தாங்கள் இவ்வித மனக்கவலைக் காளாகி, மதிமயங்கி நிற்பதும் விந்தைதான். தந்தையே! "ஈன்று வளர்த்த தாய் தந்தைக் கெவரே கைமாறியற்றிடுவர். ஆன்றமதனை நூறு வயதளவும் அடிமைத்திரம்பூண்டு மூன்று புவனத்துள்ள பொருள் முற்றும் அளித்து முறைமுறையே ஏன்றுவழி பாடியற்றுடினும் ஒரு நாள் வளர்த்தற் கிணையாகா" என்ற சூத்திரப்படி மாதா பிதாக்களால் போஷிக்கப்பெற்ற ஒருநாள் கஷ்டத்திற்கு பிரதி செய்ய எந்த ராஜ ராஜாக்களாலும், தேவர்களாலும் முடியாதென்பதே சுருதி சம்மதம். அவ்விதமிருக்க, அன்ன ஆகாரமின்றி ஆற்றொணாத்துயரில் ஆழ்ந்து கிடக்கும் எனதருமை தந்தையாகிய தங்களது கோரிக்கையை முடித்துவைப்பது எனது முதற்கடமையன்றோ ஆதலின்,



## பாட்டு

(மதிமிகுஞ் சுமந்த்ரா என்ற மெட்டு)

பல்லவி

மனமது மகிழ்வீர் அந்த
மாதை யுமக்குவி வாகமே செய்கிறேன் (மன)

அநுபல்லவி

தன தொருமதி தவறியே யிந்தச்
சஞ்சல மாகித் தயங்குவ தேனையா (மன)

சரணம்

தனைய நானுமுன் வார்த்தைத் தடுப்பேனோ
தந்தையே யுன்னிஷ்டந் தன்னைக் கெடுப்பேனோ
வினயமான விசன மூமக்கேனோ
மேலனே சீலனே லோலனே மெய்யாக (மன)

வ-ம்:—தந்தையே! தந்தை சொன்மிக்க மந்திரமில்லை, என்பதையே சிரமேற்கொண்டு எனது வில்லாசிரியரான பரசுராமரும், தன் தந்தை ஜமதக்னி முனிவரின் வேண்டுதற் கிணங்கி, தன்னை பத்துமாதந் தூக்கி, கற்ப வுதிரத்தில் வளர்த்துப் பெற்ற தாயாகிய ரேணுகா தேவியைக் கொல்லவில்லையா? ரகுவம்ஸ திலகனை ஸ்ரீராமபிரான் தனது பிதா வாக்கியப் பரிபாலனம் செய்யவில்லையா? இவையனைத்து முணர்ந்த நான் தங்களின் மன விசனத்தைத் தீர்க்கப் பின்னிடுவேனோ? ஐயா! சத்தியமாகத் தங்கள் மனங் கோரிய அம் மங்கையின் கருத்தைத் திருத்தி தங்களுக்கு மணஞ்செய்து வைக்கிறேன் செல்வோம் வாருங்கள்.

மந். வ-ம்:—மகாராஜா! இன்னமும் இவ்வித சோகத்தி லிருப்பது நன்றல்ல. தர்பாரின் காரியாதிகள் கலக்கமுற் றிருக்கின்றன ஆதலின் உடனே வந்து விவாக காரியத்தைப் பூர்த்திசெய்து

கொண்டு மணானந்த மாகவேண்டும். தமது செல்வப் புதல்வராகிய காங்கேயரும், அம் மங்கையின் கோரிக்கையை முடிப்பதாகப் பிரமாணமூலம் வாக்களித் திருக்கின்றார்.

[சந்தனு மெல்ல எழுந்திருக்க, இருவரும் கைலாகுடன் அழைத்தேகுதல்]

(சீன் முடிவு)

---

## சீன்-6. இடம்—தாஸராஜன் வீடு.

நடிகர்:—தாஸராஜன், பரிமளகந்தி, தாஸராணி, சந்தனு, மந்திரி பரிவாரங்கள், பீஷ்மர்

[சந்தனு முதலிய சகலரும் தாஸராஜன் வீட்டுக் கெதிர்நிற்க மந்திரி முன்சென்று]

மந். வ-ம்:—யாரது வீட்டுக்குள் ளிருப்பது.

[தாஸராஜன் வெளிவந்து]

தாசராஜ. வ-ம்:—வரவேண்டும் வரவேண்டும், எல்லோருக்கும் நமஸ்காரம்; என்ன காரணம்? மகாராஜா முதல் சகலரும் இங்கு வர நேர்ந்தது.

மந். வ-ம்:—காரணமாகத்தான் இங்கு வரலானோம்.

தாசராஜ. வ-ம்:—என்ன காரணமென்றுதான் நானுங் கேட்கிறேன். எனது கப்பம் வந்து சேரவில்லையா, அல்லது என் இனத்தவர்களில் யாரேனும் தெரியாமல் குற்றம் செய்துவிட்டார்களா? தயவுசெய்து சொல்லவேண்டும்.

பீஷ். வ-ம்:—யாரும் ஒருவித குற்றமும் செய்யவில்லை. உனது மகளை என் தந்தைக்குப் பெண்கேட்க வந்திருக்கின்றோம்.

தாசராஜ. வ-ம்:—சரிதான், நீங்களென்னமோ என்னைப் பரிகாசம் செய்கின்றீர்கள்.

மந். வ-ம்;—இல்லை இல்லை, உண்மையாகத்தான்.

### தர்க்கம்
(இங்கிலீஷ்நோட் - மெட்டு)

தாசராஜ. சரியல்லவே — மணஞ் செய்யவே
ஜாதி முறை — யிது வல்லவே
பீஷ். தடுக்காதே — முறை சரிதான்
மந். தகுமிதுமன — மிசைவாய்



தாசராஜ. மனமிசையோம் — இதுவசையாம்
சங். மகிதலம் புகழும்
தாஸ. மகளிசையாள் — மனை செல்லுவீர்
பீஷ். வரவழை தெரிவோம் (சரி)

தாஸ. வ-ம்:—ஐயா! இந்த வழக்கம் எங்காவதுண்டா நீங்களோ க்ஷத்ரியர்கள். நான் உங்கள் ராஜ்யத்தில் வசிக்கக்கூடிய வலைஞன். ஆகஎன் குலமுறையிலும் செய்திராத காரியத்திற் குடன்படுவது தேசத்துக் கடுக்காது.

தாஸராணி. வ-ம்:—உயர்ந்தவர் தாழ்ந்தவர் பெண்ணைக் கோருவது நல்லதல்ல, தவிரவும் உங்களிஷ்டப்படி பெண்ணைக் கொடுக்க எங்களுக்குப் பிரியமில்லை சென்றுவாருங்கள்.

பீஷ். வ-ம்:—அப்படியல்ல க்ஷத்திரியர்களாகிய நாங்கள், தாழ்ந்தவராகிய உங்கள் குலத்தில் பெண்ணெடுப்பது தகாது. எனினும் நாங்கள் மனமிசைந்து செய்யுங் காரியத்திற்கு நீங்கள் சம்மதிக்கவேண்டியதுதான். இதனால் உலகம் எங்களை இகழும் உங்களைப் புகழும்.

தாஸராஜ. வ-ம்:—அது தெரிந்த விஷயந்தான். ஆயினும், என் மகள் பிரியம் எப்படியோ அப்படியே நாங்கள் நடக்கத் தடையில்லை.

மந். வ-ம்.—ஆனால் உன் மகளை அழைத்துக் கொண்டுவா கேட்போம்.

[தாஸராஜன் உட்சென்றுவர பரிமளகந்தி வெளிவந்து நிற்கின்றாள்]

தாஸராஜ. வ-ம்:—கண்ணே! இதோ வந்திருப்பவர்களைப் பார்த்தனையா! நமது மகாராஜா உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற விருப்பத்துடன் வந்து, எங்களைப் பெண்கேட்டார். நாங்கள் தடுத்துச் சொன்னோம். அவரிதற் கிணங்காமல் உனது கருத்தை யரிந்துக் கொள்ளலாமென்று ஒரே பிடிவாதம் செய்கின்றார் உன்னிஷ்டமெப்படி?

பரி. வ-ம்:—பிதா! ஒருநாளிவர் நதிக்கரையில் கண்டு யாரென்று விசாரித்து பின்னென்னைக் காந்தர்வமணம் செய்யக் கேட்டார். அப்படியாயின், அதனாலெனக்குப் புத்திரோற்பத்தி உண்டானால் அப்பிள்ளைக்கே தனது பட்டத்தைக் கொடுப்பதாயிருந்தால் இஷ்டத்துக் கிணங்குவேனென்று தெரிவித்தேன். பதில் பேசத் தெரியாதவராய் சென்றுவிட்டார்.

மந். வ-ம்:—உன்னிஷ்டப்படி உனது பிள்ளைக்குப் பட்டந் தருவதானால் விவாகம் செய்துகொள்கின்றனையா.

பரி. வ-ம்:—தடையில்லை.

### பீஷ்மர் விருத்தம்

எத்துயர்வந்திட்டாலும் இவ்வுலகழிந்திட்டாலும்
சத்தியவதியேயுந்தன் தனையற்குப்பட்டந்தாரேன்
சத்தியவார்த்தைமாறேன் சதுர்மணந்தனையேகோரேன்
வித்தகத்தந்தைதன்னை விவாகம்நீசெய்குவாயே.

### பாட்டு

(பேசம் போம் இதுவுங்கனமா என்ற மெட்டு)

பல்லவி

தந்தேன் மகுடமுனக்கே  எனதருமைத்
தாயேகதிநீ  எனக்கே (தந்)

அநுபல்லவி

சிந்தாகுலம்விடுத்து  திருமணமேபுரிவாய்
சந்ராதியோரறியத்  தானே தனையனானே (தந்)

சரணம்

பெருமைக்குரியதிரு  மணமும்புரியேன்நல்ல
பிரமச்சரிரியெனத்  திரிவேன் -எனைப்
பெற்றுவளர்த்ததந்தை  சித்தமிகமகிழ
பெருந்தியில் வீழ்ந்துட  லெரிவேன்
தருமகுணவதியே  தனையனுனக்கடிமை
சத்தியம்செய்திட  லானேன்
இத்திசந்தோஷமாகத் (தந்)

வ-ம்:—அம்மா! இந்த ஈரேழுபதினான்குலோகங்களழிந்தாலும் சப்த சாகரமே வற்றினாலும், சூரியசந்திராதியர் கதிமாறினாலும், என் சொல்வாக்கு மாறாமல் இதோ சத்தியமாகச் சொல்கிறேன். வளமமைந்த அஸ்தினாபுரி அரசை உனது புத்திரர்களாகத் தோன்றும் எனது சகோதரருக்கே கொடுத்துவிட்டேன். என்னுடல் உள்ளவரையிலும் விவாகம் செய்துகொள்ளாமல் பிர்மச்சாரியாகவே காலங் கழிக்கின்றேன். இனி நான் தமக்கடிமை இது சத்தியம். தாயே தடையில்லாமல் தந்தையை வதுவை செய்து கொள்ளுங்கள்.

[பீஷ்மர் சத்தியம் செய்ததும், சந்தனு பீஷ்மரைச் சேர்த்தணைத்துக்கொண்டு]

### சந்தனு விருத்தம்

கற்றாலுங் கசடறவே கற்க வேண்டும்
கண்டாலும் ஞானியரைக் காண வேண்டும்



உற்றாலும் பேரின்ப முறவே வேண்டும்
ஒழித்தாலுங் கோபத்தை யொழிக்க வேண்டும்
நிற்றாலும் தவநிலையில் நிற்க வேண்டும்
நினைத்தாலும் குருமொழியை நினைக்க வேண்டும்
பெற்றாலும் உன்போன்ற பிள்ளை வேண்டும்
பீஷ்டுமனை இனியுலகில் வாழ்வா யப்பா.

வ-ம்:—கண்ணே காங்கேயா! பிதாவுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தாலும் உன்னைப்போலன்றோ பிறக்கவேண்டும். என்போன்ற காமாந்தகாரக் கசடர்கள் பிறந்தென்ன பலன்? பிறவாவிடி லென்ன பலன். வத்ஸா எனது இழிவான நடத்தைக்கு மகிழ்ந்து உனது அரசாக்ஷியைக் கொடுத்து பிர்மச்சரீரம் பெற்றுக்கொண்ட நீ இன்றுமுதல் “பீஷ்மாச்சாரி” என்ற பெயரையும் நீ நினைத்த மாத்திரத்தில் இயமன் உன்னுயிரைக் கவரும் சத்தியான வரத்தையுங் கொடுத்தேன் பெற்றுக்கொள்.

5898

[பீஷ்மர் தலைகுனிந்து நிற்கிறார்]

மந். வ-ம்:—இனி தாமதம் வேண்டாம். மணமாலை வேலை நடக்கட்டும்.

### பாட்டு

(மங்களஞ்சேரிங்கிதமார் என்ற மெட்டு)

மாமணமார் சோபனமே  மா மங்களமே
மாலைசூடி லீலையாடும்  வாலிபமே
பூம் பாலிதமே (மா)

பூமலராற் கோமகனே  பூ பாலகனே
போற்றுமண மாமகளின்  நாயகனே
ஸ்ரீ தாயகனே (மா)

தம்பதியோடிங்கிதமாய்  தான் வாழ்ந்திடவே
சங்கரலிங்கன் சந்தம்  பாடிடவே
சீர் நாடிடவே (மா)

(சீன் முடிவு)

---

## சீன்-7. இடம்—பீஷ்மர் வடுதி.

நடிகர்:—பீஷ்மர், மந்திரி, ஓர் தூதன்

[பீஷ்மர் சோகமாய் வீற்றிருக்க மந்திரி வினவுதல்]

மந். வ-ம்:—பிரபு! பூரணச்சந்ரோதயம்போல் பூரித்திருக்கும், தமது முகாரவிந்தமானது, வாடிவதங்கி சோகமுற்றிருக்கும் காரண

மென்ன? எந்தக் காரணத்தைக் கருதி இவ்வித கலக்கத்துள்ளானீர்கள்? தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்.

## பீஷ்மர் பாட்டு

(ஐயா பழனிமலைவேலா என்றமெட்டு)

| | |
|---|---|
| என்னவென் றெடுத் | துரைப்பேன் நானே |
| உமக்-கெந்தன் மனத் | துயரதைத் தானே |
| சின்னவன் சித்திராங்கத | னிறந்த-துயர் |
| தீரவில்லை எந்தனன்னை | வருந்த (எ) |
| தம்பி யவனுக்குக் | கலியாணம்-செய்யத் |
| தான் நினைக்க | நேர்ந்த தவமானம் |
| நம்பிய சிற்றன்னை குலத் | தீனம்-இந்த |
| நாட்டினர் பழிக்க மனம் | நாணும் (என்) |

வ-ம்:—மந்திரியா! தெய்வத் திருவருளின் சூக்ஷியால், என் தந்தை மனமிசைந்து விவாகம் புரிந்த எனது மாதாவாகிய சிற்றன்னையின் பிள்ளைகளும், எனது சகோதரர்களுமான சித்திராங்கதன் சித்திர வீரியனென்னு மிருவரும் வயதுக்கு வருமுன், பிதா இறந்துவிட்டார். இந்த விசனத்தில் நான் இருக்கும் சமயததில் கந்தர்வலோக சித்ராங்கத னென்பவன், தனது நாமத்துடன் பூலோகத்தில் ஒருவ னிருப்பதாவென்று, என்னையறியாது கள்ளத்தனமாக வந்து எனது மூத்த சகோதரனை சித்ராங்கதனைக் கொன்றுவிட்டான். இளையவனை சித்திர வீரியன் இளவரசி லிருக்கிறான். அவனுக்கோர் பெண்ணைத் தேடி, வதுவைசெய்து பட்டங் கட்டலாமென்றால் பரவ ஸ்திரிக்குப் பிறந்தவனுக்குப் பெண் தருவதாவென்று பாரரசர் பலரும் பழிக்கின்றனர். இந்த வார்த்தையைக் கேட்ட எனது சிற்றன்னை மிகவும் மனம் வருந்துகின்றனர். ஆகவே, இதற்கின்னது செய்வதென் றறியாது என்மனம் நாளுக்குநாள் நலிந்து வாடுகிறது.

மந். வ-ம்:—வாஸ்தவம் யெல்லாம் தெய்வ சங்கற்பம்போலாகுமன்றோ. இதற்காக வருந்தி என்ன பலன். விசனித்தால் வினை தீர்ந்துவிடுமா மனந்தமா யிருப்பதே மானவர் கடமை.

[ஓர் தூதன் வந்து நமஸ்கரிக்கின்றான்]

மந். வ-ம்:—யாரது எங்கிருந்து வந்தாய்?

தூத. வ-ம்:—பிரபு! அடியேன் காசிமகாராஜ தூதன் திருமண வோலை கொண்டு வந்திருக்கிறேன்.



[ஓலையைவாங்கி பீஷ்மரிடம் தரவும் தூதன் போகிறான். பீஷ்மன் ஓலையைப்பார்த்து]

மந்திரியா! காசிராஜன் தனது குமாரத்திகளான அம்பா அம்பிகை அம்பாலிகை இம் மூவருக்கும் சுயம்வரம் நாட்டி இருக்கின்றான் ஆதலின் இதற்கு நாம் சென்று அங்குற்ற அரசர்களுடன் போர்புரிந்து அப் பெண்கள் மூவரையும் கொண்டுவந்து சித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும். நியாயவழியில் சென்றால் நமக்குப் பெண் கிடைப்பதரிதாகும். ஆக இதுவே தகுந்த யோசனை. இந்த க்ஷணமே புறப்படுவோம். சேனைசைனியங்களை சித்தப்படுத்து.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

---

சீன்—௬. இடம்—கானகவீதி.

நடிகர்:—பீஷ்மன், மந்திரி, போர்வீரர், அம்பா அம்பாலிகை, அம்பிகை.

[ரதத்தின்மேல் அம்பா, அம்பிகை, அம்பாலிகை மூவரும் வீற்றிருக்க பீஷ்மன் குதிரைகளைப் பிடித்துக் கொண்டு நிற்க, மந்திரி, சேனை வீரர் பின்புறம் நிற்கின்றனர்]

## அம்பாள் பாட்டு

| | | |
|---|---|---|
| ஆருந்துணை | யில்லையே | |
| ஆபத்துவேளையி | லாதரித்திடயெனக் | (கா) |
| ஊருங்கடந்தேயிதோ | ஓட்டிவந்தாரேகாட்டில் | |
| கோருமென்னையகனரிடம் | சொல்லயெனக் | (கா) |
| ராஜ முறை தவறி | னே இந்த வரசன் | |
| மோசமிதனை என் | னைசை மன்னர்க்குச் சொல்ல | (யா) |

வ-ம்:—ஐயோ தெய்வமே! இதென்ன கொடுமை க்ஷத்திரிய ராஜதர்மத்தைத் தவறி இந்த அநீத காதகன் எங்களை அபகரித்துக் கொண்டு செல்கின்றானே, கேள்விமுறை யில்லையா! திக்கில்லாத வெங்களைத் தற்காத்து ரக்ஷிக்கத் துணை வருவாரில்லையே, என் செய்வேன்.

## தர்க்கம்

(நாயகன்மாள லாதுமேயானால் என்ற மெட்டு)

அம். நீயே சகாயம் செய்வது ஞாயம்
நேரர் தங்யாயம் நேரத்தில் கார்த்தருள்வீர்
அடியாளுமது பாதார விந்தம் பணிந்தேன்

(ஆஹா என்னாலேயாவாது என்றமெட்டு)

பீஷ். மாதே அன்யாயஞ் செய்யே னஞ்
சாமல் சொல்வாய்
அன்புடன் உன்னை யா தரிப்பேனே
துன்பங் கொடுக்கேனே
சொல்லை மறுக்கேனே

(ஷை மெட்டு)

அம். சாளுவதேச ராஜனின் மீது
நான் வெகு நாளாய் தான் மையலானேனையா
அதனாலெனையே அவர்தம் மிடம் போகவிடும்

(ஷை மெட்டு)

பீஷ். ஆஹா அஞ்சாதே மாதே மனம் போலவே
அங்குநீ சென்று சந்தோஷமே
நல்ல நேசமே
செய் விஸ்வாசமே (ஆஹா)

பீஷ். வ-ம்:—பெண்ணே! வீணாக அழுது புலம்பி என்னையேன் நிந்திக்கின்றாய். உன்னிஷ்டப்படியே செய்யத்தடையில்லை. பயப்படவேண்டாம் உத்தம க்ஷத்திரிய வீரனுக்கே உங்களை மணஞ் செய்துவைக்கக்கொண்டு செல்கின்றேன்.

அம். வ-ம்:—ஐயா தயவு செய்து தேரை நிறுத்தி என்னை கீழிறக்கி விட்டு நான் சொல்லும் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

பீஷ். வ-ம்:—நல்லது அப்படியே செய்கின்றேன் அதைரியப்படாமல் உன் மனக்கருத்தைத் தெரிவித்தாலதன்படி செய்துமுடிக்கிறேன்.

[அம்பாளை ரதத்தினின்று கீழிறக்கி விடுகிறான்.]

அம். வ-ம்:—ஐயா நான் வெகுநாளாய் சாளுவதேசத்தரசன் மீது ஆசைகொண்டிருக்கிறேன். அதற்குமாறாகத் தாங்களென்னைக் கொண்டுசெல்வது ஞாயமல்ல. எனது சகோதரிகளைத் தங்



களிஷ்டம் போல் கூட்டிப்போகலாம். என்னுவலைத்தடுக்காது என் கற்புக்கும் பங்கம் விளையாது என்னை சாளுவராஜனிடம் அனுப்பிவைக்கக் கோருகிறேன். அவரையே கணவராகக்கருதி இருப்பதால் வேறொரு மன்னனைமாலைகூட என் மன மிசையாது மன்னிக்கவேண்டும்.

பீஷ். வ-ம்:—நல்லது இதற்காகவா இவ்வித சோகங் கொண்டாய் உனது இஷ்டத்திற்கு இடையூறு செய்ய எனக்கும் பிரியமில்லை அடே போர்வீரர்காள் இம்மங்கையை அழைத்துக் கொண்டு போய் சாளுவ ராஜ சமுகத்தில் விட்டுவாருங்கள் மாதே சந்தோஷமாகச் சென்று சாளுவனை மாலையிட்டு மங்களாசனம் பெறுவாய்.

அம். வ-ம்:—அம்பிகா அம்பலிகா நான் சென்று வருகிறேன் நீங்களிருவருஞ் சந்தோஷமாகச் சென்று திருமணம் செய்து சுகஜீவிகளாயிருங்கள்.

[போகின்றார்கள்]

(சீன்முடிவு)

---

## சீன்-9. இடம்-சாளுவராஜன் தர்பார்.

நடிகர்:—சாளுவன், அம்பா, பீஷ்மன் மந்திரி, சேனைசைனிய தளகர்த்தர் முதலியோர்.

[சாளுவன் தர்பாரில் தனித்திருக்க திரை மேலேறுகிறது. அம்பாளை அழைத்துக் கொண்டு பீஷ்மன் மந்திரி வருகிறான்]

பீஷ் மந். வ-ம்:—ப்ரபு நமஸ்காரம்.

சாளு. வ-ம்:—ஆசீர்வாதம்! எங்கிருந்து வருகின்றீர்?

பீஷ் மந். வ-ம்:—அஸ்தினபுரி சந்தனுமகாராஜன் சமஸ்தான மந்திரியாகும்,

சாளு. வ-ம்:—அப்படியா; பீஷ்மாச்சாரிமுதல் யாவரும் க்ஷேமந் தானே.

பீஷ் மந். வ-ம்:—தெய்வக்கிருபையால் எல்லோரும் க்ஷேமந்தான்.

சாளு. வ-ம்:—இவ்வளவு துரிதமாக முன்னெச்சரிக்கையின்றி இங்கு வந்த காரணம் யாது?

பீஷ் மந். வ-ம்:—அரசே! இதோ இம்மங்கை காசிராஜனின் ஜேஷ்டகுமாரத்தி அம்பாளென்பவளிவளே. எமது இளவரசர் இம்

மாதைத் தனது சகோதரன் சித்ரவீரியனுக்குத் திருமண முடிக்க இவளின் சகோதரிகளான அம்பிகை அம்பாலிகையுடன் கொண்டுசெல்லுந் தருணம், இம் மங்கை தம்மீது காமுற்றுத் தங்களை விவாகம் செய்துகொள்வதாகத் தீர்மானித்திருந்ததைக் கேள்வியுற்ற பீஷ்மாச்சாரியானவர், தமது சமுகத்தில் இக் கன்னியை விட்டுவரும்படித் துணையாக என்னை அனுப்பி வைத்தார். அவர் வார்த்தையை நிறைவேற்றிவிட்டேன்; தயவுடன் இம் மாதை மணம் செய்துகொள்ளும் நான் உத்திரவு பெற்றுக் கொள்கிறேன். [மந்திரி போகிறான்]

அம்பா. வ-ம்:—நாதா எனது பால்யப்பிராயத்தில் தங்கள் உருவப் படத்தைத் தெரிசித்ததுமுதல் தங்களையே விவாகம் செய்யும் விரதம் பூண்டிருந்தபடி பீஷ்மாச்சாரியின் கையிலிருந்தும் விடுபட்டு திருச்சமுகம் வந்துசேர்ந்தேன். அடியாளை அங்கீகரிக்க வேண்டும்.

சாளு. வ-ம்:—பேஷ்! வெகு நன்றாயிருக்கிறது உனது நியாயம். போதும் போதும் உனது புது மணவைபவம். நீயந்த பீஷ்மனிடமே போய்விடு.

அம்பா. வ-ம்:—ஏன் எதற்காக அவரிடம் போகவேண்டும். மனதில் நினைத்தாலே தாங்கள் கணவரல்லவா? தங்களைக்கோரி விரதமிருந்தது வீணுக்காகவா. என் விஷயத்தில் தாங்கள் யாதொரு சந்தேகமின்றி,

பாட்டு

(சல்லாபமாயிருப்போம் என்ற மெட்டு)

கல்யாணமேசெய்குவா எந்தன்காதலனே
சல்லாபமான மாரா தானேவந்தேனே பாராய்
சதுர்மணஞ்செய்ய வாராய்
எனைச்சேராய் மனந்தேறாய்
ஜாலமேது காலமீது மேலுன்றனைசை மீறுவதாலே (கல்)

சுபமங்களப்பொருத்தஞ் சொல்லுஞ்சோபனமுகூர்த்தம்
ஜொலிக்குங் காந்தர்வ போகம்
வெகுபாகம் மிகுயோகம்
ஜோடிகானே கூடியாட
மேலுன்றனைசை மீறுவதாலே (கல்)

வ-ம்:—பிராணநாதா! வேறு யோசனையின்றி நமது க்ஷத்திரிய குல காந்தர்வ சையோக சம்போக முகூர்த்தஞ் செய்ய வர வேண்டும்.



சாளு. வ-ம்:—மாதே! நீயோ க்ஷத்திரிய குலத்துதித்தவள் தான். உத்தமனான காசிராஜன் புத்திரிதான். சிறுவயது முதல் என் மேற் காதல்கொண் டிருந்தவள் தான். ஆயினும், ஆசாரத்தை விடுத்து ஆபாசத்தைப் பிடித்து அரசாங்கத்தைப் பரவ குலஸ்திரீயின் பிள்ளைக்குக் கொடுத்த அக்ஷத்திரிய வீரனை பீஷ்மாச்சாரி என்பவனால் கைதொட்டெடுத்துத் தேர்மீதேற்றிக் கொண்டு சென்ற உன்னை உனது பரிதாபத்திற் கிணங்கி என்னிட மனுப்பினான். ஆகவே நீ எவ்விதத்தும் அந்நியன் கைபட்டுக் கற்புநிலை தவறினாயென்பதில் சந்தேகமில்லை. ஆதலின் நீ

பாட்டு

(தேரிமேரிஜோட்டி என்ற மெட்டு)

கொண்டுவந்த எண்ணங் கை கூடாதடி
கோவிலென்னை நாடாதடி செல்வாயடி (கொ)

பண்டுநீ நினைத்தபடி முடியாது
பகருமென் சொல் தள்ளாது கேள் மாது (கொ)

நானுன்னைச் சேரேன் நலம்பெற வாரேன்
ஏனிந்தவாது செல்லடி நில்லாதடி (கொ)

வ-ம்:—அற்பகுணம் படைத்த அசட்டுச் சிறுக்கி என்னை யாரென்று நினைத்தாய். சாளுவதேச மன்னன். ஒருக்காலும் உன் இஷ்டத்திற் கிணங்கேன் செல்லடி பிரஷ்டி.

[போகிறான் அம்பாள் மூர்ச்சித்து விழுகிறாள்.]

(சீன் முடிவு)

---

சீன்—10. இடம்—ராஜவீதி.

நடிகர்:—அம்பாள்.

(ஐயையோ அன்னன்மாரே என்ற மெட்டு)

அம்பாள் பாட்டு

ஏதுசெய்வேன் மாதுநானே ஏங்கிவாடலானேனே
தீதுவருமென்றெண்ணாமல் சென்றுமோசம்போனேனே (ஏ)

சாளுவராஜனைநம்பி தாபத்துக்காளாகினேன்
வேளைபீஷ்மரென்னசொல்வாரோ மெல்லிநானறிகிலேன் (ஏ)

வ-ம்:—ஐயோ! இப்படியு மிருக்குமா? என்விதி. இதற்காகவோ பெண்ணாய்ப் பிறந்தேன். காசி மகாராஜனின் மூத்தபுத்திரியா கப்பிறந்து அருமையாக வளர்ந்து சாளுவதேசத்தரசனை மணம் புரிய விரும்பியிருந்த எனது சுயம்வர காலத்தில் இந்த பீஷ்மரானவர் என்னையும் தூக்கி வரவேண்டுமா? வந்தாலும், எனது வேண்டுதலுக்கிறங்கி இஷ்டப்படி விட்டுவிட்ட அவ்வுத்தமரின் மனதறியாது அப்பாவி சாளுவராஜன் ஒருவன் கைதொட்டுக் கொண்டுசென்ற கன்னிகையை விவாகம் செய்துக்கொள்ளே னெனப் பழித்து என் மனோபீஷ்டத்தைக் கெடுத்தனுப்பி விட்டானே? இனி எங்கு செல்வது (யோசனை) ஆம்; இதுவே தகுந்த யோசனை. அந்த பீஷ்மரிடஞ் சென்று, சாளுவனின் செய்தியைத் தெரிவித்து அவரையே மணம் செய்துக்கொள் வோம், வேறு வழியில்லை. அவராலல்லவா நமக்கு இத்துயர் நேர்ந்தது. [போகின்றாள்]

(சீன் முடிவு)

---

## சீன்—11. இடம்—நந்தவனம்.

நடிகர்:—பீஷ்மன், அம்பாள்.

பீஷ். வ-ம்:—திருவருளின் சகாயத்தால் காசிராஜன் புத்திரிகளான அம்பிகை, அம்பாலிகை இருவரையும் சகோதரன் சித்திர வீரியனுக்கு மணம் செய்துவிட்டோம். இனி நமது மனக்கவலை தீர்ந்தது. (உற்றுப் பார்த்து) யாரது? ஓர் பெண்ணழுது கொண்டு வருகின்றாள். என்ன காரணம்.

[நின்று பார்க்கிறான். அம்பாள் உள்ளிருந்து வெளிவந்து]

### அம்பாள் பாட்டு

(ஏதேசமுனுண்டோவாரு என்ற மெட்டு)

காப்பாற்றவேணுமென் நாதா வேறு
கதியில்லை பாராய்பொற் பாதா (கா)

நம்பிவந்தேனுன்னை நானே என்னை
ரக்ஷிக்கவேணும் சீமானே (கா)

மோசம்செய்தானே மா பாவி உன்மேல்
மோகமானேனே உன்தேவி (கா)

வ-ம்:—காப்பாற்றவேண்டும். பெண்பாவம் பொல்லாது தங்களைவிட வேறுகதியில்லை. உத்தம க்ஷத்திரியகுலப் பிரபுவே! என்னை ரக்ஷிக்க வேண்டும்.



### தர்க்கம்

(காதிலிடுங்குண்டலமும் என்ற மெட்டு)

பீஷ். இந்தவிதம் சிந்தைநொந்து
ஏங்கிவருங் காரணமேன்
இந்தக்ஷணமே யுரைப்பாய்
வந்தத்துயரை யொழிப்பாய் (இந்)

அம். அந்தப்பாவி சாளுவனால்
வந்ததிந்த துயரமையா
எந்தவிதம் நானுரைப்பேன்
எவ்விதமினி பிழைப்பேன் (அந்)

பீஷ். காரணமென்ன சொல்லுவாய்
காத்திடுவே னுந்தனையே
பாரிலுனக் கேன்கலக்கம்
பாவையேவிடு மயக்கம் (இந்)

அம். மாலையிடச் சென்றவெனை
மறுத்துரைத்தான் பாதகனே
வேளையெனைக் காருமையா
விசனத்தைத் தீருமையா (அந்)

அம். வ-ம்:—ஐயா! தங்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெகு நாளாய்க் காதல்கொண்டிருந்த சாளுவராஜனிடம் சென்றேன்.

பீஷ். வ-ம்:—சென்றவள் திருமணமுடித்துக்கொண்டு வாழ்வதை விடுத்து இங்கு வந்தக் காரணமென்ன.

அம். வ-ம்:—ஐயா! தாங்களென்னை தொட்டெடுத்து ரதத்திலேற்றிக் கொண்டு வந்ததைக் குற்றமாக நினைத்து ஒருவன் கைப்பட்ட ஸ்திரீயை கல்யாணம் செய்து கொள்ளேனென்று தடுத்து என் ஆசையைக் கெடுத்து அனுப்பி விட்டான்.

பீஷ். வ-ம்:—அப்படியா! அதுவுமுனது காலபலந்தான். அதற் கென்ன செய்யச் சொல்லுகின்றாய்.

அம். வ-ம்:—தங்களாலல்லவா எனக்கு இக்கெதி வாய்த்தது. ஆத லின், தாங்களே என்னை விவாகம் செய்துகொள்ள வேண்டும்.

பீஷ். வ-ம்:—நானுன்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமா?

அம். வ-ம்:—ஆம்.

பீஷ். விருத்தம்

நித்திய பீஷ்மம் பெற்ற நிரந்தரத்துறவி என்னை
நத்திய மாதே வுன்னை நாடினேன் கனவிலும் நான்

சத்திய மாகுமென் சொல் தவறிடேன் தயங்கிடாமல்
இத்ததி உனை னூர்க்கேகி இனிதுடன் வாழ்குவாயே.

வ-ம்:—இவ்வுடலுள்ளவரை விவாகம் செய்து கொள்வதில்லை என்று பிர்மச்சரியம் பெற்ற துறவிநான் ஆகவே உன்கருத்துக் கென் மனம் மிசையாது சென்றுவிடு.

அம். வ-ம்:—எங்கே செல்வது.

பீஷ். வ-ம்:—உன் தந்தைதாயிடம் சென்று வேறுமன்னனை விவாகம் செய்துகொண்டு சுகமாயிரு.

அம். வ.ம்:—தாங்களிவ்விதம் பேசுவது தர்மமல்ல தங்களால் நான் அநாதியாகா வண்ணம்

(தர்க்கம்)

(பங்காரிமோரி பியாரிஜினை என்றமெட்டு)

கலியாணமென்னை செய்து கொண்டாட வாவாகாதலா
சலியாமலேமனம்மெலியாது சம்போகம்தாதாமாதுலா (கல்)

பீஷ். பழியாகுமேயிது மொழிவதுசரியல்ல
போ போ பாவையே
இழிவானசெய்கைக்கு வரலாகுமோயிது
யேன் யேன் பூவையே (பழி)

கொண்டஎன் மைய லெந்நாளும்விலகாது
கோபம்நீ கொண்டிட லாகாது
கோரிவந்தேன் மனமாறாது (கல்)

பீஷ். திண்டு புண்டாகவே பேசுகிறாயிது
சேதிஎன்முன்னமே படிக்காது
செல்லுவாய் நீவாது தொடுக்காது (பழி)

பீஷ். வ-ம்:—இந்த வார்த்தை உனக்குத்தகாது விரைவில் சென்றுவிடு நில்லாதே.

அம். வ-ம்:—செல்வதற்காகவா இங்கு வந்தேன். வீணாக என் பழியை யேற்றுக் கொள்ளவேண்டாம். கடிமணம் புரிந்து காதலைத் தீரும்.

பீஷ். வம்:—இன்னுமுன் துற்புத்தி போதனையையே என்னிடங் கூறுகின்றாய். இது நலமல்ல வீணான விபத்து நேரும்.

விருத்தம்

மாக்ஷிமை இல்லாமாதே மதத்தினா லலையுங்கோதே
பீஷ்மம் பெற்றநானே பேதையே யுன்னைநாடேன்



சூக்ஷ்ம மறிந்திடாமல் துடித்திங்கு வாதுசெய்தால்
தாக்ஷண்ய மின்றிகொல்வேன் ஜடுதியில் விலகுவாயே.

வ-ம்:—இனி என்முன் நின்றால், பின்னமடைவா யென்பது திண்ணம் நில்லாதே சென்றுவிடு.

[பீஷ்மன் போகிறான், அம்பாள் யோசித்து]

அம். வ-ம்:—நல்லது ராஜனே! உன்னிஷ்டம்போல் விட்டுவிடுவேனென்று போய்விட்டாய் போலும், இதோ உனது குருவாகிய பரசுராமரை யிங்கழைத்துவந்து அவர் முன்பாகவே உம்மைக் கல்யாணம் செய்துகொள்கிறேன். அப்படி செய்யாவிட்டால். என் பெயர் அம்பாளல்ல. [போகிறாள்]

(சீன் முடிவு)

---

## சீன்—12. இடம்—பூஜா மடம்.

நடிகர்:—பீஷ்மர், அம்பாள், பரசுராமர்.

[பீஷ்மர் ஓராசனத்தில் அமர்ந்திருக்க பரசுராமர் வருதல் கண்டு எழுந்து]

பீஷ். வ-ம்:—சுவாமி! நமஸ்காரம். அடிமை என்னை நாடி இவ்வேளையில் இங்கு வந்த காரண மென்ன. தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்.

பரசு. வ-ம்:—பீஷ்மா! உன்னிடம் ஓர் வேலையைக் கருதியே இங்கு வந்தேன்.

பீஷ். வ-ம்:—அதை இன்னதென்று தெரிவித்தால் அவசியம் செய்து முடிக்கிறேன்.

பரசு. வ-ம்:—அப்படியா? மெத்த சந்தோஷம். இதோ இம்மங்கை என்னிடம் வந்து முறையிட்டாள். ஆதலால்,

பாட்டு

(மைடியர் லேடி என்ற மெட்டு)

அடுத்த மாதிவள் தன்னை யினி
தடுப்பது நலமா இதமா (அடு)

பிடித்திவள்கர மினித்திடுமணை
முடித்திட வருவாய் மன மகிழ்வாய்
சுகம்பெறுவாய் தெரிவாய் (அடு)

பெண்புத்தி பின்புத்தி என்று தெரிந்தும்நீ
பேசுவதேன் வாது இது போது
தடுக்காது உன்மீது (அடு)

வ-ம்:—பெண்கள் பாவம் தகாது. அவள் யேதோ தன்னறிவு கலங்கி சால்வனை நாடிச் சென்று உன்னாலேயே அவனால் அவமதிக்கப்பட்டு உன்னிடம் வந்தாள். எந்த விதத்தும் நீயவளைக் கல்யாணம் செய்து கொள்வதே சிலாக்கியம்.

## பீஷ்மர் பாட்டு

(வடிவேலு மயிலும் துணை என்ற மெட்டு)

ஞாயமிது வாகுமா குருமுனி சொலுமொரு (ஞா)
நலமா தகுமா விதமா என்விரத மகிமைபெறு (ஞா)

தேசமெல்லாம் போற்றும் தேவரீரே சாற்றும்
சேதி அந்நீதி என்கியாதி
தெரிந் திது மொழிபுகல் வது (ஞா)

தந்தைக்காக பீஷ்மம் .தானெடுத்த சூஷ்மம்
தானே என் கோனே கண்டேனே.
தாமிது மொழி புகல்வது (ஞா)

வ-ம்:—சுவாமி! எல்லாம் தெரிந்தும் தெரியாதவர்போல் பேசுவது தகாது. விவாகம் செய்துகொள்வதில்லை யென்றும் மகுடந் தரித்துக் கொள்வதில்லை என்றும் பெரும்புவி யறியப் பிரதிக்னை செய்திருப்பது தங்களுக்குத் தெரியாதா தயவு செய்து இவ் விஷயத்தில் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

பர. வ-ம்:—என்ன சொன்னாய் க்ஷத்திரியப் பதரே அதர்ம குணா அசடே நியாயவரம்புமீறி அம்மாதைக்கொண்டு வந்து இக்கோலம் செய்ததுமன்றி என்வார்த்தையையும் மீறிப்பேசுகின்றாய். சீடனாச்சுதே என்றுமனம் பொறுத்து இன்னமுந் தெரிவிக்கின்றேன்.

## பரசுராமன் விருத்தம்

குருமொழி தடுத்தால் தெய்வம் கோபிக்குமென்று சொல்லும்
தருமமுமறிந்து நானே சாற்றுமோர் சொல் தடுத்து
கருமத்துக் காளாகாமல் கன்னியை மாலைசூட்டிப்
பெருமையாய் உலகில் வாழ்வாய் பின்வழி பெருகத்தானே.



## பீஷ்மர் விருத்தம்

கருமமே தோன்றினாலுங் கதிர்மதி மாறினாலும்
கலைகள் பேசும்
தருமமே பொய்த்திட்டாலும் தாரணியோர் பகைத்திட்டாலும்
தனைய னேற்கு
வறுமையே வந்திட்டாலும் வல்லுயிர் மாய்ந்திட்டாலும்
வைய மீதிச்
சிறுமியை வதுவைச்செய்யச் சிந்தையி லெண்ணேன் சுவாமி
தெரிகு வீரே.

வ-ம்:—சுவாமி! தாங்கள் பலவிதம் பேசுவதில் பலனில்லை. இவ்வுலகத்தி லெனக்கு எவ்வித ஆபத்து வந்தாலும் என்னுடல் உயிர் போனாலும் சொல்லிய வார்த்தையினின்றுந் தவறேன். இது சத்தியம்.

## பரசுராமன் பாட்டு

(போம்போமிதுவுங்கனமா என்ற மெட்டு)

பல்லவி

சீசீ இதுவுன் மதமா எனக்கே புத்தி
தெரிவிப்ப திந்த விதமா (சீசீ)

அநுபல்லவி

பேச்சில் பெரியவன் போல்
பெருமை படிக்க வந்தாய்
பித்தா யினித்தா மதித்தா
லுனை வதைப்பேன் (சீசீ)

சரணம்

பலபலவிதமாகப் பதட்டமொழிகளாடிப்
பரிவாயெனதுமுன்னே நின்றாய்-நான்
சிலைகுருவெனுமதை சிறிது நினையாமலே
தெரிவிக்குமொழி தடுக்கின்றாய்
தலமகிழவே இந்தத் தையலை மணராவிடில்
தப்பாதுனைக் கொல்லுவேன்
இப்போதென் சொல்தடுக்க (சீசீ)

வ-ம்:—சண்டாளா! என்ன சொல்கின்றா யிப்போதுன்னைக் கொல்கின்றேன் குரு வார்த்தையைத் தடுக்குங் குரூபி.

## பீஷ்மர் பாட்டு

(இதற்கேன் செய்குவேனே என்ற மெட்டு)

இந்தக் கோப மெந்தன் மீதில்
யேற்குமோ தபோநிதியே
சிந்தை சற்று முனியுமாகில்
தேறுமோ பெரும்புவியே (இந்)

சத்திய வார்த்தைத் தவற
க்ஷத்ரியருக் கடுக்குமோ தான்
இத்தை யறியாம லென்னை
யேசுவது தர்மமோ தான் (இந்)

வ-ம்:—சுவாமி! வீணாக என்மீது கோபிப்பதில் பயனென்ன. ஆதியில் எனது தந்தைக்காக எடுத்த பீஷ்மம் ஈடேறவேண்டாமா? அதைத் தவறுவேனாகில் உலகில் பெரிய வசைக்களாவேனே. தாங்களே இதை யோசிக்க வேண்டும்.

பர. வ-ம்:—அடே பீஷ்மா! இதுவரையுமுன்னை மாணவனென்ற முறையில் வைத்து அநேக நீதிகளைச் சொன்னேன் இனி உன் தலையைத் தப்பித்துக்கொள்ளும் விதம்பார். க்ஷத்ரியனாகில் வில்லையெடு.

[பாசுராமர் முனிந்து பாணம்விட
பீஷ்மர் வில்லை வளைத்து]

## பீஷ்மர் பாட்டு

இராகம்-அடாணா, தாளம்-ரூபகம்.

பல்லவி

மன்னனிதுவரை உன்னைக் குருவென மதித்தேன்
எந்தன்-சென்னிதனைக் கொய்வே
னென்றதற்கே வில்லை எடுத்தேன் (மன்)

அநுபல்லவி

பின்னடையாமல் கணைவிடு காணலாம்
பிர்மக்ஷத்ரியன் வில்வீரத்தைப் பார்க்கலாம் (மன்)

சரணம்

ஆரானுமென்ன நீதிதவறிடலாமோ
எந்தன் அன்னை தந்தைக்கிட்ட
வார்த்தையை நான் மாறலாமோ
பாரிலுன் தந்தை பகர்ந்ததைத் தள்ளாது
பரிவாயுன தன்னையானவள்
தன்னையே கொலை யேன்செய்தது (மன்)



பீஷ். வ-ம்:—எதோ எடும் உமது வில்வலியைக்காணலாம்.

[இருவரும் போர்செய்ய பரசுராமர்
அபஜெயமடைந்து தனியேநின்று
பேசுவது.]

பரசு. வ-ம்:—ஆஹா கேவலம் ஓர் பெண்ணுக்குதவி செய்ய முன்வந்து சீடனிடத்தில் அவமான மடையுங் காலம் வாய்த்ததல்லவா. என்னவாயினும் க்ஷத்திரிய உதாத்தீரம் மற்றவர்க்கு வாய்க்காது. இனிதேவர் மூவர்யாவர் வந்து சொன்னாலும் சரி க்ஷத்திரியருக்கு வில்வித்தைக்கற்றுக் கொடுப்பதில்லை இதுவே சத்தியம்.

[பீஷ்மன் போகின்றான் அம்
பாள் பேசுதல்.

வ-ம்:—ஏ! பெண்ணாய் பிறந்தபேயே ஏன் இன்னுமிங்கே நிற்கின்றாய் வீணாவிபரீதத்திற்குக் கொண்டுவந்துவிட்டாயே உன் எண்ணம் பலித்ததா.

## அம்பாள் பாட்டு

(பிகடி யேரி பளுதோ என்ற மெட்டு)

ஆஹா என் பிராண நாதா ஆதார மாகும் நீதா
ஓஹோ என்னைத் தள்ளாதே உனக்கே யிது தகாதே (ஆ)
உன்னாலெனக் கிவ்விதியே உண்டாச்சு ப்ராணபதியே
பெண்ணாலெனல் வார்த்தை சரியே பிடிவாதமேது யினியே (ஆ)

வ-ம்:—நாதா! தம்மை விட்டுச் செல்ல எனக்குமன மில்லையே நானெங்கு செல்வது யாரைத்துணை கொள்வது. தம்மால் தானே இக்கெதிக்காளானேன். துரையே தயவுசெய்து தாமென்னைக் கலியாணம் செய்து கொள்ளவேண்டும்.

பீஷ்மர். வ-ம்:—ஏ விநாச காலியே! இன்னுமா இந்த வார்த்தைப் படிக்கின்றாய் வேண்டாம் தப்பிப்பிழைத்தோடிப்போ இனி என் முன் நின்றால் பெண்ணென்றுங் கருதாமல் கொன்று விடுவேன்.

அம். வ-ம்:—ராஜனே எனது சுயம்வர காலத்தில் என்னை மணாவந்த மன்னனும் பின்ன மென்றென்னைத் தள்ளும்படிசெய்து குருவார்த்தையைத் தடுத்து அவரைப் புறமுதுகிட்டோட்டி, என்னையிக் கோலங்காட்டிய வுன்னுயிருக்கு எமனாக நானே ஒரு காலத்தில் வந்துன்னைக் கொல்லுகிறேன் இப்போதே என் தேகத்தை அக்கினிக் கிரையாக்கி என் சபதத்தை முடிக்கிறேன்.

பீஷ். வ-ம்:—அதற்கென்ன உன்னிஷ்டப்படியே செய்,

[போகின்றனர்]

(சீன்முடிவு)

---

சீன்—13. இடம்—யுத்தகளத்தில் பாடிகூடாரம்.

(பாரத யுத்தம் 9-வது நாளிரவு)

நடிகர்:—துரியோதனன், கர்னன், துற்சாசனன், சகுனி

[எல்லோரும் அவரவர் ஆசனத்தில் வீற்றிருக்கின்றனர், துரியோதனன் எழுந்து]

துரி. வ-ம்:—மாமா! பஞ்சைகளாகிய பஞ்சவர்களைப் பனிரெண்டு வருடங் காட்டிலோட்டியும் ஒருவருடம் அக்ஞாதவாஸம் செய்வித்தும் இடையில் எவ்வளவோ தந்திரோபாயங்களைச் செய்தும், தப்பிப் பிழைத்து இம் மகாபாரதப் போரை யாரம்பித்தனர். நமது பாட்டனாரகிய பீஷ்டுமருக்குச் சேனாதிபதி பட்டங் கொடுத்து இந்த ஒன்பது நாளாகச் சமர் செய்துவருகின்றோம்.

சகு. வ-ம்:—ஆமாம், இப்போது அதற்கென்ன இன்னும் ஒன்பது நாள் சண்டை முடிந்த பிறகுதானே ஜெயாபஜெயந் தெரிய வேண்டும்.

துரி. வ-ம்:—அப்படியல்ல மாமா,

(சோமனே காமனே ரகுராமனே என்றமெட்டு)

கண்ணிகள்

உத்தமச் சகுனிமாமா பற்றலர் பாண்டவர்செயும்
யுத்தமும் வெற்றியும் நமக்கொட்ட வில்லையே
நித்தமு மவர்க்குஜெய யுத்தமே கிடைத்துதையோ
செத்தனர் நமதுசேனை யுற்றனர் சிவகதிக்கே(உத்)

எப்படியு மவர்களுக் கிப்புவி கிடைக்குமென்று
எண்ணு தென்மன துமிகக் குண்ணு தென்செய்வேன்
சொற்படி சபதமுடித்து விற்பனப் பெயரும்பெற்று
நிற்பய மின்றியுலகை யற்புதமுட னாளுவார்(உத்)

சின்னவ னபிமன்னனே தன்னந்தனியாக வந்து
என்னயுத்தம் செய்கிறு னென்கண்ணி னெதிரே
அன்னவன் றந்தையும் பீமன் தன்னையு மடித்துக்கொல்ல
என்னரும் படையிலாரு மில்லையே என்னசெய்குவேன்(உத்)



வ-ம்:—இந்த யுத்தம் ஆரம்பித்த 9-நாள் வரையும் நமக்கு வெற்றி என்பதே கிடையாது, அந்த சின்னப்பயல் அபிமன்னன் ஒருவனுக்கீடுகொடுக்க நமது படையிலாருமில்லை. இப்படியுத்தம் நடந்தால் எப்படி நாம் வெற்றிபெறுவது. பீமார்ச்சுனனை எப்போது கொல்வது இப்பூமண்டல முழுதையும் ஏகசக்ரேஸ்வரனாக எப்போது அரசு செலுத்துவது.

[கர்னன் கோபத்துடன் எழுந்து]

விருத்தம்.

படையிலாளில்லை என்றிப் பதட்டமாய்ப் பேசவந்தாய்
மடையனும் பீஷ்மனென்னை மகாரதனு யெண்ணாது
திடமிலாதவனைப் போலிச் சேனையைக் காக்கவிட்டத்
தடையினாலைவ ரின்னுஞ் சாகாம லிருக்கின்றாரே.

வ-ம்:— துரியோதனா என்ன சொன்னாய் பஞ்சைகளாகிய பாண்டவரைக் கொல்ல நமது படையிலாளில்லை எனப்புகல்வதும் ஆச்சரியம்தான் அந்த மடையனாகிய பீஷ்மன் என்னை மகாரதனைக் கருதாது சேனைகளுக்குத் தலைவனாக நியமித்ததினாலல்லவா இன்னுமந்த பாண்டவரென்னும் பூண்டுகள் உயிரோடிருக்கின்றனர் இப்போதுமென்ன எனக்கு மகாரதப்பட்டம் தருவாயாகில்,

பாட்டு

(ஆயிரங்கவிபாடினாலும் என்ற மெட்டு)

ஆயிரம்பஞ்ச பாண்டவர்வரில்
அடித்துக் கொன்றிடுவேன்
சய-ஆக்ஷிஅரசாக்ஷி வுனக்கேயளித்திடுவேன் (ஆ)

காய்கனியைத்தின்று காட்டிலலைந்தவர்
கனைத்திறம்பெரிதா எந்தன்
கைக்கணையாலவர் ஒக்கமடிந்திடக்
காணுவே வீ தரிதா
கருத்தறியாமலே வீண் வருத்தமாவதிலே
காரணமேதுண்டு சேனைக்கதிபதி
காங்கேயனாலே இந்தக்
கர்ணன் விகர்னன் என்கைவில்லினாலே (ஆ)

வ-ம்:—இந்தச்சமயம் அந்த பீஷ்மனைச் சேனாதிபதி பட்டத்திருந்து விலக்கி எனக்குப் பட்டந் தருவாயாகில் இன்னும் அரைநாழிகையில் அந்தப் பஞ்சவர்களைக்கொன்று உனக்குப் பட்டந்தரிக்கிறேன்.

துற். வ-ம்:—வாஸ்தவந்தான் அண்ணா துரியோதன மகாராஜன் எந்தவிஷயத்தையும் தீரயோசியாமலே இவ்விதக் கஷ்டத்துக்காளாகின்றார். பீஷ்மனோ கிழவன். அதிலுமவன் சதா காலமும் பாண்டவர்கள்மீதே பக்ஷங் கொண்டிருக்கின்றான். அவனாவது நமக்கு ஜெயம்பெற்றுத் தருவதாவது.

சகு. வ-ம்:—துர்யோதனா! இதெல்லாம் வீண் வார்த்தை அப்போதே சொன்னேன். அந்தப் பீஷ்மனுக்குப் பட்டங் கொடுக்கவேண்டாமென்று. என்வார்த்தையைக் கேட்டாலல்லவோ. இப்போதுமென்ன,

(ஞாயந்தானோ நீர் சோல்லும் என்ற மெட்டு)

பாட்டு

சொல்லும் வார்த்தை தனை கேட்பாய்
மனத்-துயரமெல்லா மின்று தீர்த்திடுவா யப்பா (சொல்)

புல்லன் கிழவ னிருந்தாலே-இந்தப்
போரில் ஜயமவர்க் கிந்நாளே-ஐவர்
வல்லமை யழிய மென்மேலே-பட்டம்
வாங்கித் தருவேன் முன்னாலே (சொல்)

வ-ம்:—துர்யோதனா! பீஷ்மனுக்குப் பட்டமிருக்கிற வரையில் உனக்குத் துன்பமேதவிற இன்பமில்லை. ஆனதால் இந்த க்ஷணமே பீஷ்மனிட்ம் சென்று நாளைய பத்தாவதுநாள் யுத்தத்தில் ஐவரையுங் கொல்கிறேனென்று சபதம் செய்து தரும்படிக் கேள். பீஷ்மன் சொன்ன வார்த்தை பிசகாதவன். ஆதலால் உனக்கு உறுதி வாக்குக் கொடுத்துவிட்டோமே என்ற உடன்பாட்டுக்காவது நாளைய யுத்தத்தில் வெற்றியைக் கொடுப்பான். அல்லது பட்டத்தினின்றும் விலகுவான். இரண்டி லொன்றைத் தெரிந்துகொண்டு பின் கர்ணனுதவியால் காரியத்தை முடிக்கலாம். இப்போதே சென்றுவா.

துரி. வ-ம்:—பேஷ்! மாமா இவ்வித தந்திரங்களை எடுத்துக் கூறி எனக்குத் துணைசெய்யும் உமக்கு நானென்ன கைம்மாறு செய்யப்போகிறேன். இதோ சென்றுவருகிறேன். [போகிறான்]

(சீன் முடிவு)

---



சீன—11. இடம்—யுத்தகளம் பாசறை.

நடிகர்:—பீஷ்மர், விகர்ணன், துர்யோதனன்

[பீஷ்மர் கட்டிலில் சயனித்திருக்க விகர்னன் கால் பிடித்துக் கொண்டிருக்கிறான், துரியோதனன் வந்து நமஸ்கரித்து]

துரி. வ-ம்:—அப்பா! தயவுசெய்து எழுந்திருக்கவேண்டும்.

[பீஷ்மர் எழுந்துட்கார்ந்து]

பீஷ். வ-ம்:—துரியோதனா! இந்த ஆசனத்தி லமருவாய்.

(துரியோதனன் உட்கார)

வ-ம்:—அப்பா துர்யோதனா! இந்த நள்ளிருளில் கொடிய சமர்க்களத்தைக் கடந்து தனியாக என்னைக் காணவந்த காரணம் யாது?

தர்க்கம்

(அதி வீரமதுடனே என்றமெட்டு)

துரி. ஒருகாரிய முடனேயும திடமேவா லானேன்
தருவாய்பதில் விரைவாயிது தருணம்பெரி யோனே

பீஷ். எதுவோ அதை மொழிவாயிது தருணம்பதில் தருவேன்
விதுவார்குல திலகாவுந்தன் மிடியே விலக்கிடுவேன்

துரி. பகையாளிக ளுடனேமிக பாந்தத்துவங் காட்டி
வகையாய்சம ராடுவதுன் மதியோ படையாட்டி

பீஷ். கெடுவான்கேடு நினைப்பானெனக் கேட்டே னுனைபார்த்தேன்
விடுவாயிந்த நினைவேவுந்தன் வினையானதை தீர்ப்பேன்

துரி. வ-ம்:—என்னுடைய அன்னபானாதிகளைப் புசித்து ஆடையாபரணங்களை யணிந்து இம் மகா யுத்தகாலத்தில் எதிரிகளிடம் பக்ஷம்வைத்து யுத்தம் செய்வதுமக்குத் தகுமா?

பீஷ். வ-ம்:—துரியோதனா! யோசித்துப் பேசு. நானா எதிரிகளிடம் பக்ஷம்வைத்து யுத்தம் செய்கிறேன்.

துரி. வ-ம்:—இல்லையானால் இந்தயுத்தம் ஆரம்பித்த 9-நாளும் அவர்கள் பக்கமே ஜெயங் காண்கிறதே தவிற நமக்குக் கிடைப்பது அப ஜெயந்தானே?

பீஷ். வ-ம்:—அதற்கு நானென்செய்வது பஞ்சபாண்டவரின் பலாட்டிய முனக்குத் தெரிந்திருந்தும் இப்படிப் பேசலாமா இருதாத்

தாரும் என்னிருகண்ணுக் கொத்தவர்களாகவே நினைத்து பாரபக்ஷமின்றியே யுத்தம் செய்து வருகிறேன். மேல் நான் என் செய்வது.

துரி. வ-ம்:—தாங்கள் மனம் வைத்தால் எல்லாம் செய்யலாம்.

பீஷ். வ-ம்:—ஆம் பாண்டவரும் கௌரவரும் சமாதானமாகி விடுங்கள்.

துரி. வ-ம்:—இதுதான் செய்யமுடியுமோ.

பீஷ். வ-ம்:—வேறென்ன செய்யச் சொல்கின்றாய் என்னை

## துரியோதனன் பாட்டு

இராகம்-அடாணா தாளம்-ரூபகம்

பல்லவி

சொலுமுறை தனைக்கேட்பீர்—ஐயா
துயரமானதை தீர்ப்பீர்மெய்யா (சொ)

அநுபல்லவி

பலமிலகிய பாரதபோரயின்று
பகருமெனது மனதுமகிழ (சொ)

சரணம்

பகைதரும்பஞ்ச பாண்டவரைக்கொல்ல
பாரமாமோ அப் பாதகரைவெல்ல
வெகுவிதஞ்சொல்ல லாமோநல்லதல்ல
வேண்டுமிந்தவரம் வேண்டினேனித்தினம் (சொ)

வ-ம்:—அப்பா! தாம் மனம்வைத்தாலாகாத காரியமும் ஒன்றிருக்கிறதா. எந்தவிதத்திலும் நாளையபத்தாவது நாள் யுத்தத்தில் ஐவர்களைக்கொல்கிறே னென்பதாக எனக்கொரு வாந்தர வேண்டும்.

பீஷ். வ-ம்:—இது என்னாலாகாத காரியம். இந்த யுகத்தையும் மாற்றுவேன். ஐவரை எமனுலகேற்றுவேனென்று நானல்ல வேறு எந்த வில்வீரனுஞ் சொல்ல முன்வரான்.

துரி. வ-ம்:—அப்படி தெரிவிக்கக்கூடாது. என் வார்த்தையைத் தடுத்தால் இதோ உமது பாதத்தடியில் என்னுயிர்விடத் தயாராயிருக்கிறேன்.

[துரியோதனன் உயிர்விட எத்தனிக்க பீஷ்மர் தடுத்து]



வ-ம்:—துரியோதனா! "ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று சூழினும் தான்முந்துறும்" என்றபடி எல்லாம் அவரவர் வினைப்படி நடக்கும். எனினும் ஐவரைக் கொல்வேனென் றுறுதிவார்த்தை சொல்ல என்னாலாகாது. ஆயினும், அவர்களின் விதியின் முடிவு நாள் நாளையென்ப துண்மையானால் அவசியம் அவர்களைக் கொல்வேன். தவறினால், இப்பாரத யுத்தத்தில் ஆயுதமெடுத் தமர் புரியேனென்று அர்ச்சுனன் ரதத்தமர்ந்து கபடநாடகஞ் செய்யும் ஸ்ரீ கிருஷ்ணபிரானை நாளைய யுத்தத்தில் ஆயுதமெடுத்து அமர்புரியச் செய்கிறேன்.

துர். வ-ம்:—சந்தோஷம். தங்கள் வல்லமையைத் தெரிந்தே நானிவ் வரங்கேட்டேன். சென்று வருகிறேன்.

[செல்கின்றான்]

(சீன் முடிவு)

---

## சீன்—14. இடம்—யுத்தகளம்.

(9-வதுநாளிரவு)

நடிகர்:—துரோபதி, கிருஷ்ணன்.

## துரோபதி பாட்டு

(சுந்தரிப்பியாரி என்ற மெட்டு)

ஏதுசெய்வேனினிநான் இந்தவிதம்வந்ததே
மாதுமனமுருக மாறாத்துயர்தந்ததே (ஏது)

சூதன் துரியோதனன் சொல்லதைக்கேட்டுபீஷ்மன்
நாதரைவரைக்கொல்ல நாளைவராரேசூக்ஷ்மன் (ஏது)

இதற்கோநானித்தனைநாள் இருந்தேன் தலைவிரித்து
அதர்மமிலாதமன்னர் ஆணை தனைநினைத்து (ஏது)

வ-ம்:—ஐயோ! இனிநா னென்செய்வேன். எந்தவிதத்தில் எனது சபத்தை நிறைவேற்றுவேன். பட்ட கஷ்டமெல்லாம் பாழாய் விட்டதே. சொற்பிசகா பீஷ்மர் நாளை யுத்தத்தில் ஐவரைக் கொல்ல துரியோதனனிடம் ஆணைவைத்தாராமே. அவர் வாக்கு மாறாதே. ஏ கண்ணா! காயாம்பூ வண்ணா! அண்ணா! என் துயர் தீர்க்க இச்சமயம் வரலாகாதா.

[கிருஷ்ணன் வருதல்]

## தர்க்கம்

துரோ. திருவடி சரணம்

கிரு. கல்யாண்கல்யாண் கல்யாண் கல்யாண்கல்யாண்

துரோ. வருவாய்மாதவா வரமருள்கேசவா
ஒருவரந் தாவா

கிரு. கல்யாண்கல்யாண் கல்யாண் கல்யாண்கல்யாண்

துரோ. ஆதரிப்பீரே அருந்துணைநீரே
பாதமே தஞ்சம்

கிரு. கல்யாண்கல்யாண் கல்யாண் கல்யாண்கல்யாண்

துரோ. வ-ம்:—அண்ணா! நமஸ்காரம்.

கிரு. வ-ம்:—ஆசிர்வாதம் துரோபதா.

## தர்க்கம்

(ஓஷரிபாஷிதம்கரா என்ற மெட்டு)

கிரு. தங்கா யிந்த நள்ளிருளிலே
தயங்கித் தியங்கி யழுவதேன்
சங்கதிநானு மறிந்திட
சாற்றுவாயே கனிவுடன் (தங்)

துரோ. அண்ணா கமலக் கண்ணனே
அழகில்மிகுந்த வண்ணனே
எண்ணாத்துயரம் நேர்ந்ததே
இதுததிகுறை சார்ந்ததே (அ)

கிரு. உற்றதுயர மென்னமே
உரைசெய்வாயதை முன்னமே
கத்திநின்றழு தின்னமே
கலங்குவதேன்ன அன்னமே (உற்)

துரோ. துரியன்செய்த சூக்ஷியால்
தூயபீஷ்மன் ஆக்ஷியாய்
அருக்கரைவர் தலைதனை
அறுக்கச்செய்தா ராக்கினை (துரி)

துரோ. வ-ம்:—அண்ணா! நாளை யுத்தத்தில் எனது பிராண நாயகர்களைப் பீஷ்மர் கொல்வதாகப் பிரதிக்ஞை செய்திருக்கின்றாராம்.

[கிருஷ்ணன் மூர்ச்சித்து விழுந்தெழுந்து]



## பாட்டு

(சண்முகாசூர சம்மாரா என்ற மெட்டு)

ஐயையோ இதற் கென்செய்வேன்
ஐவருக்கிவ் விதியாச்சே
மெய்யாமென் எண்ணம்வீணாச்சே
வீடுமன் பிரதிக்கினையாச்சே (ஐ)

செய்யாத வேலையேசெய்து
தினமுங்காத் திருந்தேனே
தெய்வமேநானென் செய்வேனே
சிந்தையேநோக லானேனே (ஐ)

வ-ம்:—ஐயோ! இனி நான் என்செய்வேன் இதற்காகவா இத்தனை வருஷகாலமாக படாத கஷ்டப்பட்டுப் பஞ்சைவர்களைக் காப்பாற்றினேன். தெய்வமே உனது திருவிளையாடலா இது. ஐவரைப் பிரிந்துநானுயிர் வாழ்வேனா. [அழுகிறான்]

## துரோபதை பாட்டு

(பகவதிநித்யகல்யாணி என்ற மெட்டு)

எனது மனக்குறையே தணிந்திட
நினது மலர்ப்பதமே நினைந்திட
இரவில் வருகவென முனம தனுகினன
திட்டிரிணுரிமை தனைகேட்டு மாநில
மதனில் விழுந்து கண்ணீர்வடித்துமே
வதனமதிற் றுளி வேர்வை விட்டுமே
நெடிய மனமுருகி அழுது பதருது
எவரை கெடுக்க நினைவோ தெரிகிலது
தெரியுமுனது மாய ஜாலமே அண்ணா
சிறுமி மனதுதுயர் தீரவே இன்னாள்
தினத்தில்பீஷ்மாளித்த வரத்தில்மடியாவண்ணம்
ஜெகத்தில் பஞ்சவர்தனை யாளுமே திரு
சீதர கோவிந்தா னந்த மாதவா (என)

வ-ம்:—அண்ணா! எனது மனக்குறையைத் தீர்க்க உம்மைநினைத் தழுதால் எனக்குத் தேறுதல்கூறி மேல் நடப்பதைக் கவனிப்பதைவிடுத்து தாமிப்படிப் புலம்புவது ஞாயமா?

கிரு. வ-ம்:—என்னாலென்னவாகும்; எல்லாம் ஜெகதீச னருள்போலன்றோ நடக்கும்.

துரோ. வ-ம்:—என்ன அண்ணா இப்படித் தெரிவிக்கின்றீர்.

கிரு. வ-ம்:—என்னையேன் வாதிக்கின்றாய். என்னாலென்ன வாகு மம்மா.

துரோ. வ-ம்:—இந்த சமயம் பீஷ்மர் சபதத்தினின்றும் ஐவரைக் காப்பாற்ற முடியாதா.

## கிருஷ்ணன் பாட்டு (கட்டளைக் கலிப்பா)

காத்திட என்னாலாகாது பீஷ்டுமன்
  கட்டளைத் தவறாது முடிந்திடும்
க்ஷாத்திரத் துரியோதனன் எண்ணமே
  சற்றுமே குறையாம லீடேறிடும்
பார்த்தவர் நகைக்கவகை நேர்ந்தது
  பார்தனில் ஜெயமேயவர்க் கேர்ந்தது
ஆத்திர மடைந்தாலினி செய்வதென்
  அவலமானது ஐவர்தன் ஆண்மையே.

வ-ம்:—அம்மா! பீஷ்டுமன் செய்தப் பிரதிக்கினையி லிருந்து ஐவரைத் தப்புவித்துக் காப்பாற்ற என்னா லாகாது. ஏதோ விதிவலி இவ் விதம் நேர்ந்துவிட்டது என் செய்யலாம்.

துரோ. வ-ம்:—அப்படியானால் ஐவர்களிறந்து அமங்கலியாகி நானி றக்குமுன் இந்த சுமங்கலி கோலத்துடன் இப்போதே இறந்து விடுகிறேன்.

கிரு. வ-ம்:—நீ சொல்வது மிகவும் விந்தையா யிருக்கிறது. புருஷர்க ளிறந்தால் பூவையும் இறக்கவேண்டுமென்பது சாஸ்திரமா? அப் படி முன்னதாக இறக்க உன் மனந் துணியுமா?

துரோ. வ-ம்:—தாமிப்படி என்னைப் பரிசோதிக்கவேண்டாம். தமது கரத்தால் அக்கினி வளர்த்திக்கொடும்; அதில் விழுந்திறந்து விடுகிறேன்.

கிரு. வ-ம்:—உண்மையாகவா உயிர் மரிக்கத் துணிவுகொண் டிருக் கின்றாய்.

துரோ. வ-ம்:—ஆம் சொன்ன வார்த்தையி னின்றுந் தவறேன்.

கிரு. வ-ம்:—உன்னிஷ்டப்படியே செய்கிறேன்; செல்வோம் வா.

[இருவருஞ் செல்லும் சமயம் துரோபதி காலில் முள் தைத்ததென்று சாகஸம் செய்து புலம்புதல்]



## துரோபதை பாட்டு

(நடக்கக்கால்கள் என்ற மெட்டு)

பாதத்தில்முள் தைத்துநடக்க  பாதையாகுதே
  வேதனைத் தாளாமலேகால்  வீக்கமானதே  (பா)
மீறிரெத்தம் வாரிபோலே  மேலிட்டோடுதே
  பாரில்நானென் செய்வேன்தேகம்  பதருகின்றதே  (பா)

வ-ம்:—அண்ணா! சற்று பொறும்; இதோ என் காலில் ஓர் முள் தைத்து வெகு பாதையா யிருக்கின்றது. நடக்கக் கூட வில்லையே.

## கிருஷ்ணன் விருத்தம்

காலில்முள் தைத்ததென்று கடுந்துய ரடையும்நீதான்
சாலவே தீயில்வீழ்ந்து ஜடலத்தை விடுவையோசொல்
கேலியாய்ச் சொன்னேனென்னுங் கிலேசமுமன தில்வேண்டாம்
பாவிநீ மனதிலுள்ளப் பான்மையைப் புகலுவாயே.

கிரு. வ-ம்:—துரோபதி தங்கா! கேவலம் காலில் முள்தைத்ததென்று இத்தனை வருத்தமடைகின்ற நீயோ உன்னுடல் உயிரை வெறுத்து தீயில்விழுந் திறக்கப் போகின்றாய்.

துரோ. வ-ம்:—அண்ணா! அப்படி ஏளனமாகத் தெரிவிக்க வேண் டாம். கட்டாயம் நான் இறந்து விடுகின்றேன்.

[கிருஷ்ணன் யோசித்து]

கிரு. வ-ம்:—அம்மா! இங்கு வா; உன் மனதைப் பரிசோதிக்கவே இவ்விதம் செய்து பார்த்தேன். பரந்தாமன் இருந்தும் பாண்டவர் அபஜெயமடைந்து இறந்தாரென்ற பெயர் வந்தால் வேறென்னதான் என்னாலாகும் நல்ல திருக்கட்டும்; இப்போது பீஷ்மர் தனது பாசறையில் தனித்து படுத்திருக்கின்றார். நீ தைரியமாக அங்குசென்று உன் முகத்தை அவர் பார்க்குமுன் காலில் விழுந்து நமஸ்காரம் செய்துகொள். ஆசீர்வதித்து எங்குவந்தா யென்று கேட்பார். நானனுப்ப வந்தேனென்று பதில் சொல்லிவிடு. பிறகு நடப்பதை நான் பார்த்துக் கொள் கிறேன்.

துரோ. வ-ம்:—அண்ணா! இந்த நள்ளிருளில் சமர்க்களத்தில் தனி யாகச் செல்வதென்றா லெப்படி. எதிரிகளால் ஏதாவது கெடுதி விளையுமே.

கிரு. வ-ம்:—துணையாக நானும் வருகிறேன் செல்வோம் வா.

[போகின்றனர்]

(சீன் முடிவு)

**சீன்—15.** **இடம்—பாசறை.**

நடிகர்:—கிருஷ்ணன், துரோபதி, பீஷ்மர்.

கி. வ-ம்:—தங்கா! பீஷ்மர் அதோ சயனித்துக்கொண் டிருக்கின்றார். நீ விரைவில் சென்று உன்னையவர் இன்னாளெனத் தெரிந்துகொள்ளுமுன் அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்துகொள் பின் நடப்பதைப் பார்த்துக் கொள்கிறேன். நான் இங்குதானிருக்கின்றேன் செல்.

[துரோபதி முகமூடியுடன் உட்சென்று பீஷ்மரைப் பணிய பீஷ்மரெழுந்து]

பீஷ். வ-ம்:—ஆசீர்வாதம் தீர்க்க சுமங்க லீபவா.

[உற்றுப் பார்த்து மதிமயங்கி நின்று பின்]

பீஷ். வ-ம்:—யாரிது துரோபதியா.

து. வ-ம்:—ஆம்.

[பீஷ்மர் திடுக்கிட்டுக் கீழ்விழுந் தெழுந்து]

வ-ம்:—இது யாரால் நேர்ந்த மாயம். இக்கொடிய யுத்தகாலத்தில் இவ்வித சம்பவம் நேர்வதற்குக் காரணந் தெரியவில்லையே.

[மௌனம்]

வ-ம்:—நல்லது. இனி யோசித்துப் பலனென்ன எல்லாம் ஈஸ்வரானுக்ரகம் போல் நடக்கட்டும் இவ்விருளில் இவள் இங்கு வந்த காரணத்தை விசாரிப்போம். அம்மா துரோபதி,

### தர்க்கம்

(வேட்டைக்குபோய் நான் என்ற மெட்டு)

பீஷ். பாண்டவர்க்கனியே தீண்டொணாமணியே
பாவைஎன்னாருயிர் துரோபதியே
நீண்டசமர்க்களம் தாண்டியிவ்விருள்தனில்
நீவரக்காரண மேன்தனியே.

து. காரணமான கருத்தையறியேன்
கண்ணனென்னண்ணனிங்கனுப்பவந்தேன்
பூரணரேஎங்கள் புண்ணியரேவுந்தன்
பொன்னடிபோற்றி பூமாலைபெற்றேன்.

பீஷ். மாலடிபோற்றும் மாங்கல்யவதியே
மாயனனுப்பியவு பாயமென்ன
சாலவேயுரைப்பாய் சபலமும் தீர்ப்பாய்
சத்தியவதியேயுன் குழல்முடிப்பாய்



துரோ. குழல்முடிதந்த கோவேஎன்தேவே
கோகுலனனுப்பிய மாயமதை
தெளிவுடனானே தெரிகிலேனுரைக்க
சென்றுகேட்டறி குவீர் ஞாயமதை

பீஷ். வ-ம்:—அம்மா ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யானவர் எதற்காக உன்னைத் தனியாக இங்கனுப்பிவைத்தார். பகைவர்கள் நிறைந்த இந்த இடத்துக்கு அர்த்தராத்திரியில் வரலாமா.

துரோ. வ-ம்:—காரணமென்ன வென்பதெனக்குத் தெரியாது. அவரும் வந்திருக்கின்றார். தாங்களே நேரில்சென்று அவரை விசாரித்தறியலாம்

பீஷ். வ-ம்:—நல்லது ஏதோ காரணார்த்தமாகவே அவருன்னை யிங்கனுப்பி யிருக்கவேண்டும் கபடநாடக சூத்திரதாரி யல்லவா அவர் மகிமையையாரறிவார். அதிருக்கட்டும் இப்போதவர் எங்கிருக்கின்றார்.

துரோ. வ-ம்:—யுத்தவெளியில் தமது கூடாரத்தலை வாசலில் நிற்கின்றார்.

பீஷ். வ-ம்:—வா போகலாம்.

| | |
|---|---|
| இந்த இடத்தில் கிருஷ்ணனுடைய மாறு வேஷக் காக்ஷி சீன் காண்பிக்கவேண்டும். | இருவருமாக வந்து பார்க்கின்றனர். கிருஷ்ணன் துரோபதி கண்ணுக்கு சுயரூபமாகவும் பீஷ்மர்கண்ணுக்கு வேலைக்காரன்ரூபமாகவும் மாறுகின்றார். |

[இருவரும் வந்துகாண கிருஷ்ணன் உருமாறி நிற்க பீஷ்மர் துரோபதையைப் பார்த்து

### தர்க்கம்

(எங்கேபுத்திரி என்ற மெட்டு)

பீஷ். எங்கே மாயவன்
துரோ. இதோ எதிரே அதோ நிற்கின்றார்
பீஷ். ஏதுக்குப் பொய் வார்த்தை
சாதிக்கின் றாயம்மா (எங்)
சங்கை யிலாமலென் னிடமிந்த கேலி
தான் செய்யவோ வந்தனை
வெகு சாகஸ மாய் நின்றனை
துரோ. இங்கே பாருமிதோ நிற்கின்றாரே கோரும்
பீஷ். இல்லையே யிதென்ன சொல்லைப் பிறட்டுறாய் (எங்)

O—,812 m54;1
N33

பீஷ். வ-ம்:—துரோபதே; என்ன யிது? உனது பின்புத்தியைக் காட்டுகின்றாய்? ஏன் என்னிடம் பொய் பேசுகின்றாய்? யாரோ வோர் காவலன் நின்றுகொண் டிருக்கின்றான். அவனைப் பார்த்து இவர்தான் கிருஷ்ணமூர்த்தி என்று என்னிடங் கூறுகின்றனையே.

துரோ. வ-ம்:—ஐயோ இதென்ன அபவாதம், நான் தங்களிடம் பொய் பேசுவேனோ இதோ பாரும் எதிரில் நிற்கின்றாரே, அவர் அங்கவடையாளம் தங்களுக்குத் தெரியாதோ! உற்றுப்பார்க்க வேண்டுகிறேன்.

[பீஷ்மர் பார்க்க வேலைக்காரன்போலும் துரோபதி பார்க்க கிருஷ்ணன்போலும் சீன் டார்னிங் காட்டவேண்டும்]

பீஷ். வ-ம்:—இதோ நன்றாகப் பார்த்துத்தான் உன்னைக் கேட்கிறேன், பொய் பேசாதே எங்கே கிருஷ்ணபகவான்?

துரோ. வ-ம்:—இதோ நிற்கின்றார் பாரும், (கிருஷ்ணனைப் பார்த்து) அண்ணா இதோ பீஷ்மர் வந்திருக்கின்றாரே.

### தர்க்கம்

(ஆணழகனே அணைய என்றமெட்டு)

பீஷ். வந்தமாய னெங்கே மாதரசே சொல்சொல்சொல்
துரோ. இதோ பார்பார்பார் இதோ பார்பார்பார்
பீஷ். இவன் சேவகனே அவனைக் காணேனே
துரோ. இல்லைஇல்லைஇவர் கிருஷ்ணமூர்த்தி தான்தான்தான்
பீஷ். ஏதுசூதுசெய் கின்றாயிதுவே வீண்வீண்வீண்
துரோ. வீணல்ல நீர் பாருமே
பீஷ். வேலைக்கார னாகுமே
துரோ. கண்ணனே
பீஷ். இல்லையே (வந்த)

பீஷ். வ-ம்:—(கோபத்துடன்) துரோபதி மறுபடியும் என்னிடம் பொய் பேசுகின்றாயல்லவா, உண்மையைக் கூறமாட்டாய் நீ,

துரோ. வ-ம்:—உண்மையாக இதோ நிற்பவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தானென்று உம்மீது சத்தியம் செய்கிறேன்.

பீஷ். (யோசித்து) ஓஹோஇதே தோகபட நாடகமாகத் தெரிகிறது நமதுயிருக்குவேலை கொண்டு வந்தவர் இவ்விதம்



நம்மைப் பரிசோதனை செய்கின்றார்போல் தெரிகிறது வீணாக இவளைக்கோபித்துப் பிரயோசன மென்ன இவ்வேலைக்காரன் பாதத்தைப்பிடித்துக் கொள்வதே நமது கடமை.

### பீஷமர் பாட்டு

ஸ்ரீராகம். தாளம்-ஆதி.

பல்லவி

பூம்பாத சேவைதருவாய் புகழ்பெறு மதுரிதசுக (பூம்)

*அநுபல்லவி

காம்பார் செழுங்கமலக் கண்ணா காயாம்பூ வண்ணா
தாம்பாராழி துயிலுந் தாமோதர கோவிந்தா யிதுதகி (பூம்)

சரணம்

ஓம் ப்ரணவமூ லாதர ரூபா
ஓது மௌனதுயர் தீர்க்கும் ப்ரதாபா
சாம்ராஜ்ஜிய சல்லாப விலாசா
சங்கரலிங்க சங் கீத க்ருபேசா (பூம்)

[பீஷ்மர் வேலைக்காரன் பாதத்தைப் பிடித்துக்கொண்டு தியானித்தல்]

வ-ம்:—ஓம் அரிஹரி நாஹரி முராஹரி அம்புஜாக்ஷீ அச்சுதா வுச்சிதா பஞ்சாயுதா பண்டவர்தூதா லக்ஷ்மீ சமேதா லீலாவினோதா கமலபாதா ஆதிமத்தியாந்தாகிதா அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா பரமானந்தா முகுந்தா வைகுந்தா கோவிந்தா பச்சைவண்ணா கார்வண்ணா கமலக்கண்ணா ஜனார்த்தனா கருடவாகனா ராக்ஷஸமர்த்தனா காளிங்கநிர்த்தனா சேஷசயனா நாராயணா பிரம்ம பாராயணா வாமனா நந்த நந்தனா மதுசூதனா பரிபூரணா சர்வகாரணா வேங்கட்டரமணா சங்கடஹரணா ஸ்ரீதரா துளசீதரா தாமோதரா பீதாம்பர மச்சகச்ச வராகாவதாரா பலபத்ரா பரமதயாபரா பரமேஸ்வரா சங்கு சக்கரா சர்வேஸ்வரா கருணாகரா ராதாமனோகரா ஸ்ரீரெங்கா பாண்டுரெங்கா லோகநாயகா பத்மநாபா திவ்யசொரூபா புண்யபுருஷா புருஷோத்தமா ஸ்ரீராமா பரந்தாமா நரசிம்மா திரிவிக்கிரமா பரசுராமா சகஸ்ரநாமா பக்தவச்சலா தேவானுகூலா ஆதிமூலா வேணுகோபாலா மாதவா தேவதேவா ஆதிதேவா மகானுபாவா வசுதேவிநாயகா தசரததனயா மாயாவிலாசா வைகுந்தவாசா சுயம்பிரகாசா வெங்கிடேசா ருஷிகேசா சித்விலாசா கஜபதி ரகுபதி சீதாபதி வெங்கடாசலபதி மாயா ஆயா வெண்ணையுண்டவாயா அண்டர்களேற்றுந்தூயா உலகமுண்டவாயா நாராயணா உபாயா கருடத்துவஜா கோதண்டாஅஸ்தா புண்டரீகவரதா

ஓவிஷ்ணு பராத்பரா பரமதயாளா ஓம் நாராயணாநமோ நாராயணா ஸ்ரீமன் நமோ நாராயணா.

இங்கு மகாவிஷ்ணு காக்ஷி சீன் காட்டவேண்டும். } [வேலைக்காரன் உருமாறி மகாவிஷ்ணு கோலத்துடன் காக்ஷி தருகின்றார். துரோபதியும் பீஷ்மரும் பணிந்து நிற்க, அக்காக்ஷி மாறி ஸ்ரீகிருஷ்ண ரூபத்துடன் இருவருக்கும் காக்ஷி தருகின்றார்]

கிரு. வ-ம்:—ஆசீர்வாதம். பீஷ்மரே! தம்து மனக்கருத்தறியவே தம்மை இவ்விதம் பரிசோதித்தேன் அஞ்சவேண்டாம்.

பீஷ். வ-ம்:—சுவாமி! அடியேனையு மிவ்விதம் பரிசோதிக்க வேண்டுமோ? அதிருக்கட்டும்,

## பீஷ்மர் பாட்டு

(சூதுவாதுகள் என்ற மெட்டு)

மாதவாமதுசூதனயிந்த மாயமானவுபாயமேன்
யாதவாகுணநீதவா அடி யேன்முன்வந்தசகாயமேன் (மா)

மாதுதுரோபதியோடிங்கேவா மாக்ஷியேயென்னசூக்ஷியே
ஏதுகாரணமோதுவாயெமக் கெந்தையேப்ரியதந்தையே (மா)

வ-ம்:—சுவாமி! தாங்களிந்த இரவில் பாஞ்சாலியுடன் இங்கு வந்த காரணம் யாதோ? கபடநாடகமின்றி சொல்லவேண்டுகிறேன்.

## கிருஷ்ணன் விருத்தம்

காரணமாகநாகக் கருங்கொடிபடைத்தோனை
பேரனும்சுயோதனற்கு பேச்சென்ன சென்னையந்தத்
தோரணமறியவேண்டித் தோகையோடிங்குவந்தேன்
ஆரணமுணர்ந்தபீஷ்மா ஐவருன் னடிமையல்லோ.

வ-ம்:—ஆதிமுதல்கொண்டு பஞ்சபாண்டவருக்கும், துரியோதனாதியருக்கும் நடந்துவந்த விஷயங்கள் பூராவும் தமக்குத் தெரிந்திருக்கிறது, நியாயாநியாயம் இன்னதென்பதையுந் தாமறிவீர். இருந்தும் இம்மகா யுத்தத்தில் தாமும் போர்க்கோலங் கொண்டு முன்னின்று யுத்தம்செய்து வருகின்றீர். அத்துடன் நில்லாது, இன்று துரியோதனனுக்குத் தந்த வார்த்தை மறந்துவிட்டீரோ.

பீஷ். வ-ம்:—துரியோதனனுக்கு வரங்கொடுத்ததை அறிந்துதான் துரோபதியை என் காலில் விழச்செய்து மாங்கல்யம் பெறச்செய்தீரோ.



கிரு. வ-ம்:—எல்லாமறிந்த பெரியோருக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். எப்படியாவது ஐவர்களைக் காப்பாற்றவேண்டும்.

பீஷ். வ-ம்:—சுவாமி! இருவிதத்திலும் நான் என் வார்த்தையைக் கூறி பரிதவிக்கின்றேன். ஐவரைக் கொல்வதென்றால் யாராலாகும்; எனக்கொன்றும் தோன்றவில்லை.

## பீஷ்மர் விருத்தம்

பார்மடந்தை சுமையொழியப் பாரிதனிலவதரித்துப்
பார்த்தனோடு
பாரத்தை மூட்டுவித்த பசுந்துளவ மணிவண்ணா
பதுமக்கண்ணா
நீர்நினைத்த படிநடக்கத் தவறுமோ எல்லாநின்
நிகழ்ச்சியன்றோ
போர்முகத்தில் நான்நாளை வீரசொர்க்கம்
புகுமார்க்கம் புகலுவீரே.

வ-ம்:—எல்லாம் தமது திருவருளின்படியே நடந்தேறும். ஆயினும், நாளைய போர்முகத்தில் என்னுவி நீங்கும் வகையைத் தெரிவிக்க வேண்டும்.

## கிருஷ்ணன் விருத்தம்

ஆதியி லும்மைவேண்டி யணுகிய அம்பாளென்னுஞ்
சோதியாள் சிகண்டியாகத் தோன்றுவா னுமதுதேர்முன்
நீதியிற் பெரியோரான நீருமவ் விதமறிந்து
சாதிப்பீர் மௌனயோகந் தனஞ்செயன் ஜெயங்கொள்வானே.

கிரு. வ-ம்:—நான் தெரிவிப்பதென்ன? ஆதியில் உம்முடன் வாது செய்து மணஞ்செய்யத் தடுத்ததால், உமதுயிருக் கேமனாக வருகிறேனென்று சபதமிட்டுப்போன காசிராஜன் மகள் அம்பா என்பவள் சிகண்டி என்னும் பெயருடன் ஆண் பெண்ணில்லா அலியாக் யாகசேனன் வயிற்றில் பிறந்திருக்கின்றாள். நாளைய போர்முனையில் அவனை உமதுமுன் நிறுத்துவேன். வில்லெடுக்க மாட்டீர். அச்சமயத்தில், அர்ச்சுனன் கணையால் அடிபட்டு வீழ்ந்து அஷ்ட வசுக்களில் ஒருவராய் விளங்குவீர்.

பீஷ். வ-ம்:—சுவாமி! நல்ல உபாயம் செய்தீர். என் தந்தையின் வரமும் நாளையே பொய்த்துவிடும். என்னுயிர்க் குலைவைத்த உம்மை அடிமேலடியடித்து கையில் ஆயுதமெடுக்கேனென்ற உமது சபதம் தவறும்படி செய்தபிறகே என்னுடலைக் கிடத்துவேன்.

கிரு. வ-ம்:—ஆஹா! சந்தோஷமாகச் செய்யலாம். ஆயினும், துரோபதிக் களித்த வார்த்தையை மறக்கக்கூடாது.

பீஷ். வ-ம்:—அம்மா துரோபதா! எதற்கும் நீ சஞ்சலப்படாதே. பக்தவச்சலன் உங்கள் பங்கிலிருக்கின்றார். என் வார்த்தையும் தவறாது. உனது மாங்கல்யத்திற்குப் பங்கம் நேராது. உன் எண்ணம் ஈடேறும் சந்தோஷமாகச் செல்.

கிரு. வ-ம்:—பீஷ்மரே! கவனமிருக்கட்டும் சென்று வருகிறேன்.

பீஷ். வ-ம்:—நான் சொன்னதும் மனதிலிருக்கட்டும்; பொழுது விடியட்டும் யுத்தமுனையில் உம்மைப் பார்க்கிறேன் சென்று வாரும். [போகின்றனர்]

(சீன் முடிவு)

---

## சீன்—16. இடம்—யுத்தகளம்.

(10-வது நாள் யுத்தம்)

நடிகர்:—பீஷ்மர், துரியோதனன், சகுனி, பீமன், அர்ச்சுனன், கிருஷ்ணன், சிகண்டி.

கர்னன், நகுல சகாதேவன், துற்சாசன், விகர்னன், முதலியோர் வந்து நிற்கலாம்.

[அர்ச்சுனன் ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் சாரத்யம் செய்து வருகின்றார். பீஷ்மர் மோகனாஸ்திரத்தால் அர்ச்சுனன் மயங்கி நிற்கிறான்]

கிரு. வ-ம்:—அர்ச்சுனா! விடு பாணத்தை இதோ வந்துவிட்டார் பீஷ்மர்.

பீஷ். வ-ம்:— ஆ! ஆ!! அப்படியா ஐயா கிருஷ்ணமூர்த்தியே உம்மையும் அந்த அர்ச்சுனனையும் என்ன செய்கிறேன் பாரும்.

### பீஷ்மர் பாட்டு

(தினைவன பரண்மிசை என்ற மெட்டு)

அச்சுதனே உன்னருமை அர்ஜுனன் திறமதனை
நானே காண்பேனே
நானே காண்பேனே-ஜெயங்
தானே பூண்பேனே (அச்)

பச்சை வண்ணனுன பரந்தாமா-என்னைப்
பார்த்து மிப்படி சொல்லலாமா-உன்
பவுசது கெடவிது தருணமெனே திரினில்
நானே காண்பேனே
நானே காண்பேனே-ஜெயங்
தானே பூண்பேனே (அச்)



மோகனாஸ் திரமதனை விடுத்தேன்-உன்
மோக மழியுங்கணை தொடுத்தேன்-என்
முனமிது ததியும திருவரின் வலுவதை
நானே காண்பேனே
நானே காண்பேனே-ஜெயங்
தானே பூண்பேனே (அச்)

[பீஷ்மர் அருச்சுனன்மேல் மோகனாஸ்திரம் விடுக்க அருச்சுனன் களைத்து விழுகிறான் மேலும் மேலும் பாணம்விட்டு கிருஷ்ணனை யடிக்கக் கிருஷ்ணன் கோபஞ் சகியாது தனது சக்கரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தேர்விட்டிறங்கி பீஷ்மர்மீது பாய்கின்றார்]

இங்கு ஆகாயத்தி விருந்து சக்கரம் இறங்கி வரும் சீன் காட்ட வேண்டும்.

### கிருஷ்ணன் பாட்டு

(மருவேசேரித்த என்ற மெட்டு)

அடடா வுனது மதமே யழிய
அறுப்பேன் சிரத்தைத் துணிப்பேனே
அணுவேனு மெனை மதியா தடித்த
அடமா னதையு மொழிப்பேனே

வ-ம்:—அடே பீஷ்மா! என்னகாரியம் செய்தாய். மோகனாஸ்திரத்தால் அர்ச்சுனனை மயக்கிவிட்டு என்னைப் பாணக்கினியால் நோகச்செய்தா யல்லவா. [பீஷ்மர் ரதம்விட் டிறங்கி பணிந்து நிற்கின்றார்]

கிருஷ்ணன் பாட்டு (ஷை மெட்டு)

கெடுவா யுயிரை விடுவா யினியுன்
கெதியே எமனின் பதிதானே
கிருதே யுனது விருதே முறிய
கெலிப்பேன் சமரில் ஜெயிப்பேனே

வ-ம்:—இதோபா ரிந்தக்ஷணமே உன்னுவியைப் போக்கடிக்கின்றேன். [சக்கரத்துடன் ஓடி வருகின்றார் பீஷ்மர் பணிந்தெழுந்து]

### பீஷ்மர் பாட்டு

(தாச்வேசி என்ற மெட்டு)

பல்லவி

ஐயா அபயம் மலர்க் கையா சரணமெனே
மெய்யாய் காக்கவேணும் (ஐ)

அநுபல்லவி

துய்யா வுனக்கெதிரி
பொய்யா முலகிலுண்டோ
செய்யா கோபந்தணியும்
வையா மணியழகா (ஐ)

சரணம்

சீரார்பாரதத்தில் போரார் பாணந்தொட்டு
போரே'புரியே னென்று
தாரார் துரி யனிடம்
நேரேயுரைத்த செயல் வேறானதே யின்று
பாரார்மாதவ கோபாலாமாயவனே
பாராயெனது முகங் காராய் தூயவனே (ஐ)

வ-ம். அபயம் அபயம் சுவாமி அடியேனைக் கொல்ல இத்தனை சிரமத்துடன் சக்கரத்தைக் கையேந்தி மலர்ப்பாதம் நோக ஓடிவர வேண்டுமோ மனதில் நினைத்தமாத்திரத்தில் மாண்டு விடமாட்டேனோ.

கிரு. வ-ம்:—அபயம் புகுந்தவுன்னைக் கொல்வது தகாது.

பீஷ். வ-ம்:—அதிருக்கட்டும் பாரதயுத்தத்தில் ஆயுதமெடுத்து அமர் புரியேனென்று துரியோதனனிடம் வாக்களித்த உமது சொல் பலித்ததா. அல்லது உம்மை எவ்விதத்தும் கையிலாயுதமெடுக்க வைக்கிறேனென்ற என்வார்த்தை பலித்ததா.

கிரு. வ-ம்:—சபாஷ் சந்தோஷம் பீஷ்மரே

## விருத்தம்

சொன்னநின் வார்த்தையின் சொற்சோர்வுறா வண்ணம்நானே
என்னருஞ் சக்கரத்தை எடுத்தனன் கையிலின்றே
என்னவ ராகினும் என்னருந் தாசராகும்
தன்னவர்க் கடிமைசெய்யுஞ் சங்கதி விளங்கத்தானே.

வ-ம்:—உன் வார்த்தையும் பலித்தது, என் வார்த்தையும் பலித்தது. பரமன் பக்தருக் கடக்கம் என்னும் உண்மை விளங்கவும், உனது பக்தியின் மகிமை உலக மறியவும், உன் வார்த்தையை நிலைநிறுத்தவும் வேண்டி சக்கரத்தைக் கையி லெடுத்தேனே தவிற சமர்புரியவில்லையே, சமர்புரிந்தாலல்லவோ என் வாக்கியா பங்கமாகும். பக்தன் வார்த்தையைக் காப்பாற்ற ஆயுதமெடுத்ததினால் என் வார்த்தைக்கு மாறுதலேற்படாது.

[சிகண்டி வருகின்றான்]

சிக. வ-ம்:—அடே பீஷ்மா! கிருஷ்ணமூர்த்தியைக் கையி லாயுதமெடுக்கக் கண்டோமென்று கருவங்கொள்ளாதே. இதோ பூர்வ



கன்மானுபவப்படி உன்னுயிருக் கேமனாக நானே எதிரில் நிற்கிறேன், விடு வுன் பாணத்தைப் பார்ப்போம்.

[பாணம் விடுகின்றான் பீஷ்மர் மயங்கி நிற்க]

கிரு. வ-ம்.—அருச்சுனா! இதுதான் சமயம், ஆகட்டும் வுனது வேலையைப் பார்.

## அர்ஜுனன் விருத்தம்

பிதாமக ரெதிரில்வில்லைப் பிடிக்கவு மனமுமில்லை
இதாஹித மின்றிபாண மெய்யவும் பலமேயில்லை
வுதாசினங் கொள்ளவேண்டாம் வுள்ளதைச்சொன்னேன்வேறு
பதாதியர் தம்மைக்கொண்டு பாணத்தை விடச்செய்வீரே.

அர். வ-ம்:—சுவாமி! பிதாமகர்மீது பாணமெய்து பிராணன் போக்கவோ என்னைத் தூண்டுகின்றீர்.

[விசனிக்கின்றான்]

[கிருஷ்ணன் அர்ச்சுனன்காதில் யேதோ சொல்கின்றார் அர்ச்சுனன் பாணம்விட பீஷ்மர் கீழ் விழுகின்றார்]

[தருமர் பீமன் கர்னன் துரியோதனன் துற்சாசனன் சகுனி முதலியோர் வருகின்றனர்]

பீஷ். வ-ம்:—அப்பா தருமநந்தனா! அப்பா துரியோதனா! இருவரும் இப்படி வாருங்கள்.

[இருவரும் இருபுறம் வருகின்றனர்]

பீஷ். வ-ம்:—பௌத்திரரே! இதோ எனது பிராணன் காண்டீபன் கைக்கணையால் பிரியப் போகின்றது. இதுவரை யுத்தம் செய்ததில் நீங்கள்கண்ட பலன் யாது? என்போன்றோர்களை இழந்ததே பெருமை. தவிரவும் துரியோதனா இனியேனும் உனது துஷ்டபுத்தியை விட்டு தருமனுடன் கூடி அவனது நாடு நகரங்களைக் கொடுத்து இருவரும் சந்தோஷமா யிருங்கள்.

தரு. வ-ம்:—தங்களுத்திரவிற்குத் தடையில்லை.

துரி. வ-ம்:—அவ்விதம் செய்ய எனக்கு சம்மதமில்லை.

[பீஷ்மர் யோசித்து]

பீஷ். வ-ம்:—நல்லது, துரியோதனா! எனக்கு தாக மதிகரிக்கின்றது பானம்செய்ய ஜலமும் உத்தராயண புண்ணிய காலம்வரை என் ஜீவன் பிரியாதாதலால் இவ்விடத்தில் சயனித்திருக்க தர்ப்பாசனமும் வேண்டும்.

துரி. வ-ம்:—துற்சாசனா! நமது பாடிகூடாரத்திற்குப் போய் பஞ்சு மெத்தையும் செம்பில் ஜலமுங் கொண்டுவா.

தரு. வ-ம்:—அருச்சுனா! நமது பிதாமகர் சொன்னதைக் கேட்கவில்லையோ?

அரு. வ-ம்:—அண்ணா! தங்கள் உத்திரவை எதிர்நோக்கி யிருந்தேன் இதோ பாரும்.

| | |
|---|---|
| அர்ச்சுனன் பூமியிலிருந்து ஜலம்வர வழைக்கும் சீன் தர்ப்பாசன சீன் காட்டவும். | பாணப்பிரயோகம் செய்து பூமியிலிருந்து ஜலம் வரவழைத்துத்தந்து மற்றொரு பாணத்தால் தர்ப்பாசனம் செய்து கொடுத்துப் பீஷ்மருக்குபசாரம் செய்கின்றான். |

பீஷ். வ-ம்:—துரியோதனா நேரில் பார்த்துக்கொண்டனையா. இனியாவது ஜெயாப ஜெயம் ஆருக்குக்கிடைக்குமென்று தெரிந்துகொள்.

துரி. வ-ம்:—ஆவதாகட்டும்.

தரு. வ-ம்:—எல்லாம் பகவான்செயல்.

பீஷ். வ-ம்:—ஆசீர்வாதம்! தருமநந்தனா சுப மங்கள மகுடாசனம் பெறுவாய்.

(சீன் முடிவு)

---

## வாழ்த்து விருத்தம்

பார்த்த சாரதியும் வாழி பாரதக்கதையும் வாழி
தீர்த்தமாருலகம் வாழி திருமகள் விலாசம் வாழி
மூர்த்தி யாலயங்கள் வாழ் முழங்கு மிக்நாடகத்தைப்
பார்த்தவர் கேட்போர் வாழி படிப்பவர் வாழிமாதோ

## சகலரும் பாடுதல்

ஆனந்தச் சோபனமே தானன்புக்ஷேமனமே
ஆலிங்கன ஸ்தாபனமே மேலுங்கண் டோமுனமே
ஆரம்பம் பாரெங்கும் ஆணும் பெண்ணுந்தான்
சேரும்பண் பேகொண்டுந் தோணுங் கண்ணுந்தான் (ஆ)

அதிமதுரித ரகசியமுண் டாருக் குத்தான்
பொதுவிதியிது மதிபேசும் பேருக் குத்தான்
ஆ முத்து நூலுக்கி தே செப்புமே
மா முத்து சாமிக்கு ளே ஒப்புமே (ஆ)

## நாடகம் முற்றுப்பெற்றது

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1933.

ஸ்ரீமத்

# கம்பராமாயண வசனம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது)

[ இதேமாதிரி பெரிய எழுத்தில் படங்களுடன்

1064-பக்கங்கள்: உயர்ந்த காலிகோ பைண்டு செய்தவை விலை ரூ. 5.

டை திக்கு கடிதம் 2-வால்யம் ரூபா. 7.

டை உயர்ந்த கிளேஸ் கடதம். ரூபா. 10.

ஸ்ரீராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்கள காரியங்கள் நிறைவேறும், புத்திர பாக்கியமுண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி சூனியம், தீராத நோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகி யிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்து கொள்ளலாம்.

எல்லா புஸ்தகங்கள் அடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

ஸ்ரீமத்

# கந்தபுராண வசனம்

[☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிட்டு 40-அழகிய லெத்தகிராப் கலர் படங்கள் கூடியது. திக்குகடிதத்திலச்சிட்டது: 1050-பக்கங்கள் கொண்டது உயர்ந்த காலிகோபைண்டு செய்தது: விலை ரூபா 5. ஷை உயர்ந்த கிளேஸ் கடிதம் 2-வால்யம் ரூபா 9.]

முருகப்பெருமான் திருவவதாரத்தைப்பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றிலும் சிறந்தது கந்தபுராணமே ஆகும்.

கந்தபுராணம் செய்யுள் வடிவத்திலே இருத்தலின் அதனை பயிலுவோர் இலக்கண இலக்கிய பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்கமாட்டாதாகும்.

அருமை வாய்ந்த கந்தபுராணத்தினை முன்னரே பலர்வொருவாறு வசனரூபமாக்கி அச்சிட்டிருப்பதில் செய்யுட் காவியத்திற்கும் இதற்கும் அநேக யிடங்களில் கதையும் கருத்தும் மாறுபட்டிருப்பதுமல்லாமல் கற்று வல்லோர்க்கும் கற்றுவல்லோரல்லார்க்கும் வெறுப்பினை யுண்டாக்கத் தக்கனவாகிய நடைகளோடு சொன்னயங்களும் பொருணயங்களும் சிறிது பொருத்தமின்றி பல வழூஉக்களுடன் அச்சிடப்பட்டிருந்தமையால் அக்குறையை நீக்குவான் வேண்டியாம் தக்க வித்வான்களின் உதவியைக்கொண்டு முறைப்படுத்தபடுவனவும், திருத்தப்படுவனவும், சேர்க்கப்படுவனவும் இவற்றை முறையே சேர்த்தும் முறைப்படுத்தியும் வெள்ளரிவினருக்கும் எளிதில் விளங்குமாறு பெரிய எழுத்தில் திருத்தமாகவும், புராணத்திலடங்கிய படலங்களில் நிகழும் விஷயங்களுக்கு பொருத்தமாகவும் நேரிற் கண்டாற்போல விளங்கத்தக்க 40-திருவுருவப்படங்களுடன் அமைத்து சேர்த்தும் அச்சிட்டுள்ளோம். இதனைப் படிப்போர் மனமுருகி அன்புவயப்பட்டு முருக தாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

எல்லா புஸ்தகங்கள் அடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

ஆயிரத்தொருநாள் இரவிற்சொல்லிய

# அராபிக் கதை

[☞ இதேமாதிரி பெரிய எழுத்து திக்கு கடிதம்: 24-படங்களுடன், மூன்றுபாகங்களடங்கியது. 1488-பக்கம்: அழகிய காலிகோ பைண்டு செய்தது. விலை ரூபா 3—8—0.]

பூர்வீக கதைகளில் இக்கதை மிகவும் சிறப்பு வாய்ந்ததென்பதை யாவரு மறிவார்கள். இதன் மேன்மையைக் கருதியே இது பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு இவ்வுலகமுழுதும் பரவியிருக்கின்றது. இக்கதையின் தொடக்கம் ஷாரேயர், ஷாஜமான் என்பவர்களால் உண்டாகி ஷயாஸாட் என்னும் ஸ்திரீயால் சொல்லப்பட்ட அனேக ஆச்சர்யக் கதைகள் அடங்கிய பெரிய ஒரு கதாசாகரம். இதில் அனேக கதைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையும், ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். மூன்று பாகங்களும் ஒன்றாய்ச் சேர்த்து டிம்மி அளவில் 1488-பக்கங்கொண்ட பெரிய புஸ்தகம்.

# விக்கிரமாதித்தன் கதை

[ஆண், பெண், பால, பாலிகைகள் யாவரும் எளிதில் வாசிக்கும் பொருட்டு ☞ இதேமாதிரியான பெரிய எழுத்தில் 618-பக்கங்கள் 48-ஐதீகப் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது இதன் விலை ரூபா 1.
ஷை திக்கு கடிதம் காலிகோ பைண்டு: விலை ரூபா 1-8-0]

இது பூர்வத்தில் மகா பிரக்கியாதிபெற்று, நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாதனத்தில் வேதாளத்தையே வாகனமாகக்கொண்டு 2000-வருடங்கள் அரசியற்றி அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்தன் என்னும் சக்கிரவர்த்தியின் பிரபாவங்களை அம்மன்னனுக்குப் பின்னால் அரசியற்றிய வீர, சூர, தீர பராக்கிரமசாலியாகிய போஜமகாராஜனுக்கு வினோதரஞ்சிதம், மதனாபிஷேகம், கோமளவல்லி, மங்களகல்யாணி, மந்திரமனோன்மணி, சிங்காரமோனவல்லி, பரிமளமோகினி, கிருபா பரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான ஆச்சரியத்தை இடையிடையே பல விசித்திர ஆனந்தக் கதைகள் இதிலடங்கி யிருக்கின்றன.

எல்லா புஸ்தகங்கள் அடங்கிய கிரய ஜாபிதா தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கட்டராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

# நம்மிடம் கிடைக்கக் கூடிய

## புஸ்தகங்கள்.

வடுவூர். கே. துரைசாமி ஐயங்காரவர்கள் பி. ஏ., யால் எழுதப்பட்டவை.

| | ரூ. அ. |
|---|---|
| கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார் | |
| 1-வது பாகம் | 1 8 |
| 2-வது பாகம் | 1 8 |
| மாயாவிநோதப்பரதேசி அல்லது திகம்பரசாமியார் | |
| 3-வது பாகம் | 2 8 |
| 4-வது பாகம் | 2 8 |
| பூர்ணசந்திரோதயம் 1-வது பாகம் | 1 12 |
| 2-வது பாகம் | 1 12 |
| 3-வது பாகம் | 2 0 |
| 4-வது பாகம் | 2 0 |
| மதனகல்யாணி 1-வது பாகம் | 1 8 |
| 2-வது பாகம் | 1 8 |
| 3-வது பாகம் | 1 8 |
| சௌந்தர கோகிலம் 1-வது பாகம் | 1 8 |
| 2-வது பாகம் | 2 4 |
| 3-வது பாகம் | 2 4 |
| திகம்பரசாமியார் பாவிய லீலை | |
| 1-வது பாகம் | 2 8 |
| 2-வது பாகம் | 2 8 |
| மேனகா 1-வது பாகம் | 1 8 |
| 2-வது பாகம் | 1 8 |
| பாலாமணி | 2 8 |
| வஸந்தமல்லிகா | 1 8 |
| வித்தியாசாகரம் | 1 4 |
| திலோத்தமா | 0 12 |
| திவான் லொடபட சிங் பகதூர் | 0 12 |
| மாணிக்க வாசகர் | 0 8 |

58881

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடாராமய்யர் தெரு,
மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.